# விடுதலைப்புலிகள்

குரல்: 68 | 1-15 ஆனி 1996 | அன்பளிப்பு: 5/-


## உள்ளே


- அரசியல் தீர்வும் அரசின் நிலைப்பாடும்
- கிழக்கு மாகாணம்: போரில் புதிய திருப்புமுனை!
- சிறீலங்கா: பகலும் இரவாகிவிட்ட நாடு!
- பொருளாதார நெருக்கடிகளால்] அரசாங்கம் ஆட்டங்காணுமா?
- விண்ணதிர மண்ணதிர விரிந்த கடலதிர கண்திறந்து வருகநம் கருப்பை உயிர்கள்




திருக்கோணமலைக் களத்தை வழிநடாத்தும் தளபதி சொர்ணம்;

# கிழக்கில் புலிகள் பெறும் மேலாதிக்கம்:

# சிங்கள அரசு நெருக்கடியை எதிர்கொள்கிறது!

கிழக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ மேலாதிக்க நிலை பரவத் தொடங்கியிருப்பதால், சிங்கள அரசாங்கம் அரசியல் – இராணுவ நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.

இடைவிடாத – தொடரான – அதிரடித் தாக்குதல்களை நடாத்திவருகின்ற புலிகள், இப்போது, மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரும் நிலப்பரப்பைக் கட்டுப்படுத்துவதுடன் – திருக்கோணமலை, அம்பாறை மாவட்டங்களிலும் தமது செயற்பாடுகளை, முன்னெப்போதுமில்லாத வகையில் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதன் விளைவாக – கிழக்கு மாகாணத்தில், சிங்கள அரசின் நிர்வாகக் கட்டமைப்பு படிப்படியாகச் சீர்குலையத் தொடங்கியுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் கேந்திர முக்கியத்துவத்தைப் பெற்றுவிட்ட ஒரு நிலப்பரப்பாகவே, கிழக்கு மாகாணம் எப்போதும் விளங்கிவருகின்றது.

தமிழீழப் போரை அடியோடு முறியடித்துவிட வேண்டுமெனில், கிழக்கு மாகாணத்தைத் தமது இறுக்கமான பிடிக்குள் வைத்திருந்தே ஆகவேண்டுமெனக் கருத்தைக்கொண்ட சிங்கள அரசுகள் -

ஆரம்பம் முதலே, கடுஞ்சிரமங்களுக்கு மத்தியிலும். அந்தத் தேவையை உறுதியோடு நிறைவு செய்து வந்தன.

'தமிழர் தாயக' கோட்பாட்டை இல்லாமலாக்கி – தமிழினத்தின் தேசியத் தன்மையைச் சிதைத்து - அவர்களது விடுதலைப் போராட்டத்தின் அடிப்படையையே தகர்த்து விடுவதற்கென -

அத்துமீறிய நிலப்பறிப்பின்மூலம் குடியேற்றப்பட்ட, பல பத்தாயிரம் சிங்கள மக்கள் வாழும் ஒரு குடியேற்றப் பிரதேசம் என்பதாலும் -

தமிழ்த் தேசிய இனப்பிரச்சினையின் அங்கமாகி, இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய மக்கள் சமூகமாகத் திகழும் முஸ்லிம்கள் - தமது பாரம்பரிய வாழ்விடமாகக் கொண்டு - கூடிய அளவில் வாழும் ஒரு பிராந்தியம் என்பதாலும் -

சிங்கள தேசத்தோடு நிலத்தொடர்ச்சிகொண்ட நீண்ட எல்லையைக்கொண்டது என்பதாலும் -

நீண்ட கடற்பரப்பையும், வளம் நிறைந்த நிலப்பரப்பையும் மட்டுமன்றி திருக்கோணமலையின் இயற்கைத் துறைமுகத்தைத் தன்னகத்தே உடையது என்பதாலும் -

அரசியல், குடியியல், புவியியல், ரீதிகளிலும், அதன் காரணமாக இன்று போரியல் ரீதியிலும் இன்றியமையாத ஒரு பாத்திரத்தை கிழக்கு மாகாணம் பெற்றுள்ளது.

இத்தகைய சிறப்புத் தன்மைகளின் காரணமாக, சிங்களப் படைகள், கிழக்கு மாகாணத்தின் இராணுவ சமநிலையில் தமது மேலாதிக்க நிலையை - எந்த ஒரு கட்டத்திலும் விட்டுக் கொடுக்காமல் - தொடர்ந்தும் பேணியே வருகின்றன.

இந்தியப் படைகள் தமிழீழத்திலிருந்து வெளியேற்றப்பட்டதைத் தொடர்ந்து, கிழக்கு மாகாணத்தில் சிங்களப் படையினரின் நடவடிக்கைகள் கட்டுப்படுத்தப்பட்டு, அங்கு புலிகள் நூறு வீத செயற்பாட்டுத் திறனைக் கொண்டிருந்தனர். ஆனால், 2 ஆவது ஈழப் போர் தொடங்கியதன் பின், வடக்கை முற்றாகக் கைவிட்டாலும் கிழக்கை முழுமையாகக் கைப்பற்றியே தீரவேண்டுமென முழு முயற்சியெடுத்த பிரேமதாச அரசு, அதில் வெற்றியும் கண்டது.

2 ஆவது ஈழப்போரின் முடிவில் புலிகள் இயக்கத்துடன் மோதல் தவிர்ப்பு உடன்படிக்கைக்குவந்து, சமரசப் பேச்சுக்களை நடாத்தியபோதும் - கிழக்கு மாகாணத்தில் இறுக்கமான பிடியையே சந்திரிகா அரசாங்கம் கடைப்பிடித்தது. சமரசப் பேச்சுக்களை நடாத்திக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில்கூட புலிவீரர்களின் செயற்பாடுகளுக்குச் சிங்களப் படைகள், பெரும் தடையாக இருந்தன. தற்காப்பு ஆயுதங்களைக்கூட கொண்டுசெல்ல அனுமதி மறுக்கப்பட்டது; படகில் வந்த போராளிகள் சிலரைக் கைதுசெய்த பொலிசார், அவர்களிடமிருந்த ஆயுதங்களைப் பறித்தனர்; குருமண்வெளி முகாமில், வீதியால் போகும் போது தடுத்துத் துன்புறுத்தப்பட்டதால், 2 ஆவது லெப். சிறீநிவாசன் என்ற போராளி 'சயனைட்' உட்கொண்டு வீரச்சாவடையநேர்ந்தது.

இவ்வாறாக - அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த கிழக்கு மாகாணத்தை எப்போதும் தமது ஆளுகைக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக, சிங்களப் படைகள் அங்கு நிலைநாட்டியிருந்த இராணுவ மேலாதிக்க நிலையை, இப்போது -

3 ஆவது ஈழப்போரின் ஆரம்பத்திலிருந்தே புலிகள் இயக்கம் படிப்படியாகச் சரித்துவருகின்றது.

வடக்கில் படையினர் 'சூரியப் பிரகாசம்' நடவடிக்கையில் கவனம் செலுத்த, புலிகள் கிழக்கில் தாக்குதல்களைத் தீவிரப்படுத்தினர். இதனால், கிழக்கு கள நிலைமை படிப்படியாக சிங்களப் படைக்கு பாதகமானதொன்றாக மாறத் தொடங்கியது.

இன்று, கொழும்பின் இராணுவ ஆய்வாளர்களே அரசுக்கு அபாயச் சமிக்ஞை காட்டும் அளவுக்கு, கிழக்கின் இராணுவநிலை உள்ளது. குடாநாட்டில் அரசு பெற்ற இராணுவ வெற்றியால் அரசுக்குக் கிடைத்த நன்மைகளைவிட, கிழக்கில் அது சந்திக்கும் இராணுவப் பின்னடைவுகள், சந்திரிகா அரசாங்கத்திற்கு பாரிய அரசியல் - இராணுவ நெருக்கடிகளை வழங்கப்போகின்றன! ○

புலிகளின் குரல்

# அரசியல் தீர்வும் அரசின் நிலைப்பாடும்!

தமிழரின் தாயகத்தைப் பிரித்துத் துண்டாடும் ஒரு சதியாலோசனை முயற்சியில் - சந்திரிகா அரசாங்கம் - இப்போது தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

வட-கிழக்கின் தொடர்ச்சியான நிலப் பரப்பைத் திட்டமிட்டுத் துண்டாடி - அங்கே இரண்டு அல்லது மூன்று வெவ்வேறு அலகுகளை ஏற்படுத்தி - தமிழர் தேசியத்தைக் கருவறுக்கும் கைங்கரியத்தைச் செய்ய, சந்திரிகா அம்மையார் துடியாய்த் துடிக்கின்றார்.

இந்தச் சூழ்ச்சித் திட்டத்திற்கு ஜனநாயக முலாம் ஒன்றைப் பூசி உலகை ஏமாற்றும் திட்டத்துடன், சில தமிழ்க் குழுக்களைத் தன்வசம் ஈர்க்க, அம்மையார் பிரயத்தனப்படுகின்றார்.

உள்முரண்பாடுகளால் பொ. ஐ. முன்னணி அரசாங்கம் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்ளும் இந்தத் தருணத்தில், சில தமிழ்க் குழுக்கள், அந்த அரசாங்கத்திற்கு முண்டு கொடுக்க முயற்சிப்பதுடன், தமிழரின் அரசியல் அபிலாசைகளுக்கு முரணான ஒரு அரைகுறைத் தீர்வுத் திட்டத்திற்கு ஆதரவு அளிக்கும் அரசியல் துரோகம் ஒன்றில் ஈடுபடவும், தயாராகி வருவதுபோல் தெரிகிறது.

'தமிழரின் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு' என்ற சந்திரிகா அரசாங்கத்தின் கோஷம், சூழ்ச்சிகள் பல நிறைந்தது. உண்மையில், சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் நிலைப்பாடாகிய 'இராணுவ வழிமுறையிலேயே இனப்பிரச்சினைக்கான தீர்வு' என்ற கொள்கைதான், சந்திரிகா அரசாங்கத்தின் அந்தரங்கத் திட்டமாகும்.

தமிழர் தேசியத்தின் பாதுகாப்புக் கவசமான புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் பலமிழக்கச் செய்துவிட்டு - அதை ஒரு பேரம்பேசும் விடயமாக வைத்துக்கொண்டு - அரசியல் தீர்வு என்ற போர்வையில் அரைகுறைத் தீர்வுத்திட்டமொன்றைத் தமிழினத்திற்கு வழங்குவது என்பதுதான், அம்மையாரின் உள்நோக்கமாகும்.

தமிழரின் தேசிய தனித்துவத்தைச் சிதைக்கும் வகையில் அரசாங்கம் 'முன்வைக்க விரும்பும் அரைகுறைத் தீர்வுத்திட்டத்தை எமது மக்களையும் ஏற்றுக்கொள்ளச் செய்விப்பதற்கான மார்க்கமாக, ஒன்றன்பின் ஒன்றான படையெடுப்புக்களையே, அரசாங்கம் பயன்படுத்தி வருகின்றது.

இந்தவகையில், இனப்பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் ஒன்றை வரைவதற்கான அடிப்படையாக, தமிழர் தரப்பிலுள்ள அரசியல் நியாயங்களோ அல்லது தமிழ் மக்களின் ஏகோபித்த விருப்பமோ இருக்கவில்லை; படைபலத்தைத்தான் அதற்குரிய அடிப்படையாக அரசாங்கம் நிர்ணயித்து வைத்திருக்கின்றது என்ற பூடகமான உண்மையை, எமது மக்கள் புரிந்துகொள்ளவேண்டும்.

இதனால்தான், தீர்வுத்திட்டங்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் அல்லது அரைகுறை தீர்வுயோசனைகளைச் சமர்ப்பித்த பின்னர் - தமிழர் நிலம்மீது - பாரிய படையெடுப்புக்களை சந்திரிகா அரசாங்கம் நடாத்தி வருவதை, நாம் காணமுடியும்.

யாழ்ப்பாண ஆக்கிரமிப்பிற்கு முன்னர் ஒரு அரைகுறை தீர்வு யோசனையை அரசாங்கம் வெளியிட்டிருந்தது. நாடாளுமன்றத் தெரிவுக் குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அந்த சட்டவரைவு, முழுமையான தீர்வுத்திட்டமாக அமைந்திருக்கவில்லை.

அதிகாரப் பரவலாக்க நிர்வாக அலகுகள் பற்றி அதில் குறிப்பிடப்பட்டிருககவில்லை இப்படியான அரைகுறைத் தீாவுத்திட்டமொன்றை வெளியிட்டுவிட்டு, தமிழர் தாயகத்தில் இராணுவ மேலாதிக்க நிலையை அடைந்துவிட, அரசாங்கம் முயற்சிக்கின்றது.

இராணுவ மேலாதிக்க நிலையில் இருந்துகொண்டு, குறைந்தபட்ச தீர்வொன்றை தமிழர்கள் மீது திணிப்பதுதான் சந்திரிகா அரசாங்கத்தின் திட்டமென்பது. இப்போது அம்பலத்திற்கு வந்துவிட்டது.

அரசாங்கத்தின் இந்தத்திட்டம் குறித்து தமிழ்க் கட்சிகள்கூட அதிருப்தி தெரிவித்திருக்கின்றன. ஒட்டுமொத்தத்தில் சொல்லப்போனால், இராணுவ ரீதியிலான தீர்வொன்றை நோக்கி - சந்திரிகா அரசாங்கம் செல்கிறைது.

இத்தகைய இராணுவவாத அணுகுமுறையை அரசாங்கம் கடைப்பிடிக்கும் வரை, தீர்வுயோசனைகள் - பேச்சுவார்த்தைகள் - என்பன அர்த்தமற்றவைகளாகவே இருக்கும்.

இந்தவகையில், தமிழரின் தேசிய பலம் ஒன்றுதிரட்டப்பட்டு வலுப்படுத்தப்படவேண்டிய அத்தியாவசிய தேவையை, எமது மக்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். தமிழரின் படைபல அதிகரிப்பும் நிர்ப்பந்தங்களுக்கு அடிபணியாத உறுதிப்பாடுதான், தமிழினத்திற்கு சுபீட்சத்தைப் பெற்றுக்கொடுக்கும் என்ற உண்மையை, எமது மக்கள் என்றும் மனதில் வைத்திருக்கவேண்டும். O

# நுணுக்குக்காட்டி

"அரசின் தீர்வு யோசனைகள் அமுலாக வேண்டுமானால் முதலில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட வேண்டும். அதன் பின்னர் சர்வஜன வாக்கெடுப்புமூலம் அங்கீகாரத்தைப் பெறவேண்டும். இது நடைமுறைச் சாத்தியமான காரியமா? நிதானமாகச் சிந்திப்பவர்கள், இல்லை என்றே கூறுவார்கள்."

- அமைச்சர் எஸ். தொண்டமான்
'வீரகேசரி' - 09. 06. 1996

---

"நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற தமிழ் உரிமைப் போராட்டத்தை நினைவுகூரவே நாம் இங்கு கூடியிருக்கிறோம். அன்றைய நிலையை விட தமிழரின் நிலை இன்று, மிகவும் சிக்கலடைந்திருப்பதாகவே நாம் கருதுகிறோம்.

இந்த அரசு பதவி ஏற்றபோது தமிழ் மக்களிடம் இருந்த எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், ஆர்வங்கள் அனைத்தும் இன்று குன்றி வருவதையே எம்மால் அவதானிக்க முடிகிறது."

- பிரதி அமைச்சர்
பி. சந்திரசேகரன்
'வீரகேசரி' - 09. 06. 1996

---

"பண்டா - செல்வா ஒப்பந்தம், டட்லி - செல்வா ஒப்பந்தம் என்று மாறிமாறி வரும் அரசுகளுடன் ஒப்பந்தங்கள் எழுதுவதும், பின்பு ஒப்பாரி வைப்பதுமே எமக்குப் பழக்கமாகிவிட்டது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடைபெற்ற மொழி உரிமைப் போராட்டங்கள் பற்றியும் சத்தியாக்கிரகத்தின் மகிமைபற்றியும் கூட்டங்கள் கூடி பேசுவதின்மூலமோ, பாராளுமன்றத்தில் இவைபற்றி விவாதங்கள் நடத்துவதன் மூலமோ எதையும் நாம் பெற்றுவிடமுடியாது."

- அமைச்சர் எஸ். தொண்டமான்
'வீரகேசரி' - 09. 06. 1996

---

முட்களின் மேல் நடப்பது போலவும்
வெறிச்சோடிய சூன்யத்திற்குள்
இருப்பது போலவும்
வினாடிகள் ஒவ்வொன்றும்
ஒரு பயங்கரம்வந்து நகர்வது போலவும் ஆன
வடபுல வாழ்க்கை!
ஷெல்லடித்த காயங்களில்
கட்டட உடல்கள் சிதைந்து நிற்க
பெண்மை பலாத்காரமாய் பறிக்கப்பட்டும்
வாழ்க்கை எல்லாவிதத்திலும் ஒடுக்கப்பட்டும்
இன்னும் -
மனித உணர்வுகள் அடக்கப்பட்டும் இருக்கும்
இதைவிட மரணம் மேலானது என
நினைக்க வைக்கும்!

- ஆஷா
'சரிநிகர்' மே 02 - மே 15, 1996

---

"சிங்கள மொழியில் 'இனப்பிரச்சினை' என்னும் சொல்லொன்று இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நான் இதுபற்றி ஹொரண வஜிரஞான தேரோவிடம் கலந்துரையாடல் ஒன்றின்போது கேட்டேன். அந்தப் பிக்குவும் இல்லை என்றார். வெளிநாடுகளில் இருந்து இவற்றை தயாரித்து அனுப்புகின்றனர். அவை என். ஜி. ஓ. காரர்களின் (தொண்டர் நிறுவனங்களின்) சொற்கள். அவர்கள் பணத்தைப் பெற்றுக் கொண்டு அங்கு கூறுவதற்கேற்ப செயற்படுகின்றனர்."

- வல்பொல ராகுல தேரோ
('லங்காதீப' இதழில்)
'வீரகேசரி' - 15. 05. 1996

---

"இந்த நாட்டைப் பொறுத்தவரையில், ஒருவரை தமிழரா என்பதைக் கண்டறிவதற்காக மட்டுமே பாதுகாப்புப் படையினரால் அடையாள அட்டை கேட்கப்படுகின்றது. அடையாள அட்டையைக் காட்டினாலும் விசாரணை, காட்டாவிட்டாலும் பிரச்சினை என்ற நிலையில்தான் தமிழ் மக்கள் உள்ளார்கள்."

- ஆசிரியர் தலையங்கம்
'வீரகேசரி' - 23. 05. 1996

---

"தென்னிலங்கையில் மின்சாரத் தடையால் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்கள் துயரங்கள் இரண்டு நாள் சமாச்சாரம். ஆனால், வட பகுதியில் போருக்கு மத்தியில் கடந்த 6 வருடங்களாக மின்சாரம் இல்லாது மக்கள் பட்ட வேதனைகள், சோதனைகள் எப்படியானவை என்பதை இந்த இரண்டு நாள் சமாச்சாரமே புரியவைத்திருக்கும்"

- செழியன் மாணிக்கவாசகர்
'வீரகேசரி' - 06. 06. 1996

---

கேள்வி : மீண்டும் பேச்சுவார்த்தை நடத்தத் தேவையில்லை, என்றா நீங்கள் கூறுகின்றீர்கள்?

பதில் : பைத்தியமா? பேச்சுவார்த்தை நடத்திப் பயனில்லை. பயங்கரவாதிகள் கதைக்கும் மொழியினாலேயே அவர்களுக்கு பதில் அளிக்கவேண்டும்.


கேள்வி ; இந்தக் கருத்து பௌத்த தருமத்துக்கு எதிரானது அல்லவா?

பதில் : இது பௌத்தம் அல்லவே. பௌத்தத்துக்கேற்ப இதனை செய்ய முடியாதே? இது ஒரு யுத்தம். அதனை யுத்த சட்டத்துக்கேற்ப போர் உபாயங்களுக்கேற்ப செய்ய வேண்டும். எனவே ஒன்றுமே இல்லை.

- வல்பொல ராகுல தேரோ
('லங்காதீப' நேர்காணலில்)
'வீரகேசரி' - 15 05. 1996

# தென் தமிழீழப் போரரங்கு:

# விடுதலைப்போரில் புதியதொரு திருப்புமுனை



**வடக்கில் பெரும் இராணுவ வெற்றியைப்பெற்றுவிட்டதாக இறுமாந்திருக்கும் சிங்கள அரசுக்குப் பெரும் இராணுவ-அரசியற் தோல்வியைக் கொடுக்கும் வகையில், கிழக்குக் களத்தை நெறிப்படுத்துகின்றார் தலைவர் பிரபாகரன் அவர்கள்.**

யாழ்ப்பாணக் குடாநாட்டை மீளக்கைப்பற்றி, அங்கு தமது அரசின் நிர்வாக ஆளுகையை மீண்டும் நிலைநிறுத்த வேண்டும் என்ற மைய நோக்கத்தை (Objective) அடைவதற்காக, ஜெனரல் அனுருத்த அவர்கள், ஆபத்தான ஒரு மூலோபாயத்தை (Strategy) கையாண்டார். ஏற்கெனவே அவரது படைகளின் கைகளிலிருந்த கிழக்கில் பெருமளவு துருப்புக்கள் நிலைகொண்டிருந்த நிலையில், அவர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றப் புறப்பட்டபோது, படைபலப் பற்றாக்குறை என்ற பெரும் பிரச்சினையை எதிர்கொண்டார். அந்தப் பிரச்சினையை வெற்றிகொண்டு, 'சூரியப் பிரகாசம்' படையெடுப்புகளை அரங்கேற்ற அவர் கையாண்ட அந்த மூலோபாயம் என்னவெனில் -

கிழக்கின் குறிப்பிட்ட ஒரு பகுதியிலிருந்து - மட்டக்களப்பின் படுவான்கரைப் பிரதேசத்திலிருந்து - தனது படைகளை முற்றாக விலக்கி, வடக்குப் படையெடுப்பிற்கு நகர்த்துவது என்பதுதான்.

ரத்வத்த அவர்கள் நடைமுறைப்படுத்திய இந்த மூலோபாயம், சிங்கள தேசத்திற்கு நன்மை பயக்கப்போகின்றதா அல்லது தீமை பயக்கப் போகின்றதா என்பதை - அது தரும் விளைவுகளைக் கொண்டு - எதிர்காலம் தீர்மானிக்கும். எனினும், இந்த மூலோபாயத்தின் பெறுபேறு எப்படியானதாக இருக்கப்போகின்றது என்பதை நாம் கணிப்பீடு செய்ய முடியும்.


3 ஆம் கட்டப் போரின் தொடக்கத்திலிருந்தே மட்டக்களப்புப் பிராந்தியத்தில் தமது இராணுவ நடவடிக்கைகளைப் புலிகள் தீவிரப்படுத்தினர். 2 ஆம் கட்டப் போர்க்காலத்திலும், அதன் தொடர்ச்சியான சந்திரிகா அரசாங்கம் - புலிகள் சமரசப் பேச்சுக் காலத்திலும், விட்டுக்கொடுக்காத இரும்புப் பிடிக்குள் தாம் வைத்திருந்த கிழக்குப் பிராந்தியத்தில் புலிகள் வல்லமை மிக்க தாக்குதல்களைத் திடீரென நடாத்தத் தொடங்கியமை, சிங்களப் படைத்துறை உயர் வட்டாரத்தில் திகைப்பினை ஏற்படுத்தியது. முகாம்களுக்கிடையிலான ரோந்துகளும், விநியோகங்களும் அதிரடிகளுக்கு இலக்காகியதுடன், முகாமகளும் தாக்குதலுக்கு உட்பட்டன. கிழக்குப் போர் அரங்கின் முக்கிய நிகழ்வுகளாக, உயர் பயிற்சி பெற்ற ''சிறப்புப் படை''யினரைக் கொண்டு உச்சகட்டப் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்த கட்டுமுறிவு மற்றும் தரவைக்குளம் முகாம்கள் மீதான பெரும் தாக்குதல்கள் நிகழ்கின்றன. முதுநிலைத் தளபதி கருணாவின் வழிநடத்தலின் கீழ் புலிகள் கொடுத்த இவ்விதமான இடையறாத அழுத்தத்தின் காரணமாக, தக்கவைத்துக் கொள்ள முடியாது எனக் கருதிய பல முகாம்களை அகற்றிவிடவேண்டிய நிர்ப்பந்தம் சிங்களப் படைக்கு எழுந்தது. அதே சமநேரத்திலேயே, குடாநாட்டுச் சமர்களுக்காக கிழக்கிலிருந்து படைகளை நகர்த்தவேண்டிய தேவையும் வந்தது. ஜெனரல் அனுருத்த அவர்கள், படுவான்கரைப் பிரதேசத்திலிருந்து படைகளை வெளியேற்றி - குடாநாட்டுக்கும் அனுப்பினார்; எழுவான்கரைப் பகுதியையும் பலப்படுத்தினார்.

மாவட்டத்தின் உட்புறப் பகுதிகளிலிருந்து படைகள் பின்வாங்கிக்கொண்டிருக்கும்போதே, இடைவிடாத - தொடர்ச்சியான - அதிரடிகளை நிகழ்த்தியவண்ணம் முன்னேறிய புலிகள், எதிரியின் வெளியேற்றத்தைத் துரிதப்படுத்தி, இப்போது அவனை எழுவான்கரைப் பிரதேசத்திற்குள் முடக்கியுள்ளனர். பெரும் நிலப்பரப்பிலிருந்து படைகள் வெளியேற்றப்பட்டமையானது, புலிகள் அப்பகுதியில் இலகுவாகப் பலம் பெறவும், கிழக்கில் போரை விஸ்தரிப்பதற்கான ஒரு பின்தளத்தை வைத்திருக்கவும், அரசியல் செயற்பாடுகளை அதிகரிக்கவும் கூடிய சாதகத் தன்மைகளைப் புலிகளுக்குக் கொடுத்துவிட்டது.

கொழும்பிலிருந்து வெளிவரும் 'சரிநிகர்' என்ற இருவார இதழ், கிழக்குக் களநிலையை விபரிப்பதைப் பின்வருமாறு ஆரம்பிக்கின்றது:

''மட்டக்களப்பின் அரச நிர்வாகத்தை இல்லாதொழிக்கப் புலிகள் மெல்ல மெல்ல நகரை நோக்கி நகர்ந்து வருகின்றார்கள் என்றால், அதில் எந்த வியப்புமில்லை. மட்டுநகரிலிருந்து நாலைந்து மைல்களுக்கு அப்பால் அரச திணைக்கள வாகனங்கள் செல்வதைக் காணக் கூட முடியவில்லை.

படுவான்கரைப் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டிற்குள் அல்லது ஏதோ ஒருவகையான நிர்வாக முறைமைக்குள் இருப்பது அனைவரும் அறிந்த ஒரு விடயமே. நகரிலிருந்து சில மைல்கள் தள்ளி வாழைச்சேனை, கல்முனை பிரதான வீதிகளில் புலிகள் சுதந்திரமாகவே உலாவுகின்றார்கள்.''





மட்டக்களப்புக் களமுனையில் தளபதி கருணா:
05. 12. 1995 இல், புதுக்குடியிருப்பு இராணுவ முகாம் தாக்குதலில் களப்பலியான கரும்புலி மேஜர் ரங்கனுடன்.

திருமலைக் களமுனையில் தளபதி சொர்ணம்:
பெப்ரவரித் திங்களில் நடாத்தப்பட்ட, புல்மோட்டை 10 ஆம் கட்டை முகாம் தாக்குதலுக்குத் தயார்ப்படும் போராளிகளுடன். →

# போராட்டத்தை முறியடிக்க அனுருத்த கையாண்ட மூலோபாயத்தின் முடிவு என்னவாக இருக்கப்போகிறது?

மாவட்டத்தின் 80 வீதமான நிலப்பரப்பைக் கொண்ட படுவான்கரைப் பிரதேசத்தில் இப்போது, சிங்களப் படை தனது கட்டுப்பாட்டை இழந்து நிற்கின்றது; அது தனது கட்டுப்பாட்டைப் பேணிவரும் எஞ்சிய 20 வீத நிலப்பகுதியான - மட்டக்களப்பு நகரை உள்ளிட்ட - எழுவான்கரைப் பிரதேசத்தில், புலிகளின் உச்சகட்ட நெருக்கடியைச் சந்தித்தவண்ணம், ஏறக்குறைய முற்றுகையிடப்பட்ட நிலையிலேயே உள்ளது.

பிரபல இராணுவ ஆய்வாளர் தாரகி, 'சண்டே ரைம்சு'க்கு எழுதுகையில், மட்டக்களப்பின் 'இராணுவச் சமநிலை'யைப் பின்வருமாறு கணிப்படுகின்றார்:

"'வெலிக்கந்த - மட்டக்களப்பு வீதி, கல்முனை - மட்டக்களப்பு வீதி, மண்டூர் வெல்லாவெளி - அம்பாறை பக்கியெல்ல வீதி என்ற மூன்று பிரதான பாதைகளும் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன. இந்த வீதிகள்மீது புலிகள் ஓயாது அழுத்தத்தினைக் கொடுத்துவருகின்றனர். தரைப்படையினராலோ அல்லது சிறப்பு அதிரடிப்படையினராலோ அதனைத் தடுத்து நிறுத்த முடியாதுள்ளது.

இந்த மூன்று முக்கிய விநியோகப் பாதைகளையும் விரும்பிய நேரத்தில் சீர்குலையச்செய்யும் ஆற்றலைப் புலிகள் கொண்டுள்ளனர். அரசாங்கம் தனது கவனத்தை நீண்ட காலத்திற்கு வடபகுதியில் செலுத்துமாயின், புலிகளால் இராணுவத்தின் நடவடிக்கைகளை மட்டக்களப்பில் இறுதியாக முறியடிக்க முடியும்; அத்தகைய நிலையை இவர்கள் பெறுவர்.

ஏற்கெனவே, மட்டக்களப்பு மாவட்டத்தின் உட்புறத்தே அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த சகல பகுதிகளையும் புலிகள் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் -

வாகரைப் பகுதியுடன் நிலத்தொடர்புள்ள திருக்கோணமலை மாவட்டத்தின் தென்பகுதி உட்புறத்தையும், அங்கிருந்து கல்குடா வரையான நீண்ட கரையோரப் பகுதியையும் விடுதலைப் புலிகள் கட்டுப்படுத்துகின்றனர்."

மட்டக்களப்பு வாவி, அந்த மாவட்டத்தின் புவியியல் அமைப்பை இரண்டு துண்டுகளாக்குகின்றது. ஒருபகுதி, சூரியன் எழுகின்ற திசையில் உள்ளதால் எழுவான்கரை எனவும், மறுபகுதி சூரியன் மறைகின்ற (படுகின்ற) திசையில் உள்ளதால் படுவான்கரை எனவும் பெயர்பெற்றுள்ளன. ஒருபுறம் பெருங்கடலையும், மறுபுறம் மட்டக்களப்பு வாவியையும் கொண்ட எழுவான்கரைப் பிரதேசம், நீண்டு ஒடுங்கிய ஒரு தீவு போன்றே உள்ளது. செங்கலடிப் பகுதியிலுள்ள ஒரு சிறு நிலப்பகுதியைத் தவிர இயற்கையான தரைத்தொடர்புகள் எதுவும் எழுவான்கரைப் பகுதிக்கு இல்லை. இத்தகைய இதன் தரைத்தன்மை காரணமாகப் பெரும் ஊடுருவற் தாக்குதல்களை மேற்கொள்வதற்குத் தடையாகக் கடுமையான சிக்கல்கள் - பாதகத்தன்மைகள் - உள்ளபோதும், காத்திரமான - தாக்கமுள்ள - பல அதிரடி நடவடிக்கைகளைப் புலிகள் அப்பகுதியில் தொடர்ச்சியாக நடாத்திவருகின்றனர். கடைசியாக கடந்த மார்ச் மாதம் 23 ஆம் நாள், பெரிய விநியோக அணி ஒன்று அதிரடிக்கு இலக்காகி, உடனடியாக 41 படையினரும் காயமடைந்தவர்களில் 15 பேருமாக 56 படையினர் கொல்லப்பட்டனர்.

மாவட்டத்தின் நிர்வாகபீடமாக விளங்கும் மட்டக்களப்பு நகரத்தைத் தன்னகத்தே கொண்டிருப்பதால், அரசாங்கத்தின் நிர்வாக இயந்திரத்தைச் செயலிழக்கச் செய்வதற்காக எழுவான்கரைப் பிரதேசம்மீது புலிகள் கொடுக்கும் - நேரடியான அதிரடித் தாக்குதல்கள் அல்லாத - மறைமுகமான நெருக்கடிகளுக்கும், அங்கு நிலைகொண்டுள்ள படைகள் வெகு சிரமத்தோடு முகங்கொடுக்கவேண்டியுள்ளது. அசையும் - அசையாத தமது படைநிலைகளின் பாதுகாப்பையே உறுதிப்படுத்த முடியாமல் திண்டாடும் வேளையில், அரசாங்கத்தின் நிர்வாகக் கட்டுப்பாடு அங்கு சீர்குலைந்துபோகாமல் காத்துநிற்கவேண்டிய பெரும் பாரத்தையும் அவர்கள் சுமக்கவேண்டியுள்ளது. உண்மையிலேயே, மட்டக்களப்பிலுள்ள பொருளாதார மற்றும் நிர்வாக இலக்குகளைக் குறிவைக்கும் புலிகளின் - இரகசிய மற்றும் பகிரங்க - நடவடிக்கைகளை முறியடிக்க முடியாமலேயே, சிங்களப் படையினர் அங்கு உள்ளனர்.

**"மட்டக்களப்பின் அரசுநிர்வாகத்தை ஒழிக்க புலிகள் மெல்ல மெல்ல நகர்ந்து - நகரை நோக்கி வருகின்றனர்."**


மட்டக்களப்பு மாவட்டத்தில் கனிந்துவரும் இவ்வாறான முன்னேற்றகரமான களநிலைமை மெல்ல மெல்ல விரிவடைய, கிழக்கு மாகாணத்தின் இராணுவச் சமநிலையில் பெரிய மாற்றங்கள் நிகழத் தொடங்கியுள்ளன.

திருக்கோணமலை மாவட்டத்தில் - முன்னெப்போதுமில்லாத வகையில் - விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இப்போது தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. முதுநிலைத் தளபதி சொர்ணம் அவர்கள் நடவடிக்கைகளை வழிநடாத்த, சிங்கள அரசின் மூலோபாயத்தைத் தோல்வியுறச் செய்யும் தந்திரோபாயங்களைப் புலிகள், அங்கும் பிரயோகிக்க ஆரம்பித்துவிட்டனர். வீதி உலா மற்றும் விநியோக அணிகளினதும், திருக்கோணமலையின் நூறுவீதப் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காகப் பரவலாக அமைக்கப்பட்டுள்ள சிறிய படைமுகாம்களினதும் நிலை, உத்தரவாதமற்றதாய் மாறத்தொடங்கிவிட்டது. குடாநாட்டுப் படைகளுக்கான வழங்கற்பாதையின் வாயில் என்ற பாத்திரத்தை வகிப்பதால், தமிழீழப் போரில் திருக்கோணமலை, இராணுவ ரீதியான கேந்திர முக்கியத்துவத்தையும் இன்று பெற்று விளங்குகின்றது. இங்கு களநிலை சிங்களப் படைக்குப் பாதகமானதாய் மாறும்போது, ஏற்கெனவே சிக்கல்களைக் கொண்டுள்ள வடக்கிற்கான விநியோகப் பாதை, மேலும் அபாயகரமானதாய் மாறலாம்.

**தாக்குதல் இலக்குகளுக்கான போர்வலய எல்லை - கிழக்கில் - தமிழீழத்திற்கு வெளியேயும் சென்றுள்ளது.**

அம்பாறை மாவட்டத்தில் புவியியல், குடியியல் தன்மைகள் பாதகமானதாய் உள்ள

**"மட்டக்களப்பில் படையினரின் நடவடிக்கைகளை இறுதியில் புலிகளால் முறியடிக்க முடியும்."**



# வடக்கைக் கைப்பற்றியதைவிட அரசியல் முக்கியத்துவம் வாய்ந்தது கிழக்கைப் பாதுகாத்திருக்க வேண்டியதே என்பதை, காலம் பிந்தியே அரசு உணரப்போகிறது.



அம்பாறை மாவட்டச் சண்டையொன்றில் காயப்பட்ட தோழன் ஒருவனுக்கு, களத்தில் உடனடிச் சிகிச்சையளிக்கும் புலிகள்.

போதும்கூட, இன்று, கணிசமான செயற்பாட்டுத் திறனை அங்கும் புலிகள் கொண்டுள்ளனர். ஆங்காங்கு கொடுக்கின்ற அதிரடிகள்மூலம் மெது மெதுவாக முன்னேற்றம் காணும் புலிகள், எதிர்காலத்தில் படையினருக்கு வாய்ப்பற்ற ஒரு களச்சூழலை அம்பாறையிலும் உருவாக்கி விடும் சாத்தியக்கூறுகளே தென்படுகின்றன.

இவ்விதமாக விரிவாக்கம் பெற்றுவரும் கிழக்குப் போரரங்கு இப்போது, சிங்கள தேசத்தின் எல்லைகளையும் அரிக்கத் தொடங்கிவிட்டது. தாக்குதல் இலக்குகளைத் தேர்ந்தெடுக்கும் போர்வலய வரம்பு பொலநறுவ, அநுராதபுரம், பதுளை மாவட்டங்களுக்கு விரிந்துவிட்டது. இதன் விளைவாக - தமிழினத்தின் தேசியத் தன்மையைச் சிதைக்கும் நில அபகரிப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி - கிழக்கு மாகாணத்திலும், அதன் எல்லைப் புறங்களிலும் நிறுவப்பட்டுவரும் சிங்களக் குடியேற்றங்களுக்கு வழங்கப்படுகின்ற பாதுகாப்பு உத்தரவாதம் சிதறடிக்கப்படுகின்றது. பாதுகாப்பற்ற சூழ்நிலை தம்மைச் சூழ்வதாகக் குடியேற்றவாசிகள் கருதி, குடியேற்றபபகுதிகளை விட்டு அவர்கள் வெளியேறத் தொடங்குவார்களானால், மாபெரும் அரசியற் தோல்வியை சிங்கள தேசத்திற்குப் பெற்றுத் தந்தவர்கள என்ற வரலாற்றுப் பழி, சந்திரிகா - ரத்வத்த அரசாங்கம் மீது சுமத்தப்படும்.

ஆனால், ஜெனரல் ரத்வத்த அவர்கள் இதனை மறுக்கின்றார். இழந்துவிட்ட மட்டக்களப்பின் பகுதிகளைக் குறுகியதொரு கால எல்லைக்குள், வரையறுக்கப்பட்ட நடவடிக்கை ஒன்றின்மூலமாகவே மீளவும் கைப்பற்றிவிடுவதுடன், மாறிவரும் கிழக்கின் இராணுவச் சமநிலையைத் தமக்கு முற்றிலும்சாதகமான தாகத் திரும்பவும் கொண்டுவரத் தம் படைகளால் இயலும் என, அவர் உறுதி கூறுகின்றார். அது வெறும் வாய் வீரம் அல்ல; நடைமுறைக்குச் சாத்தியமானதுதான். குடாநாட்டையே பிடித்துவிட்ட அவரது படையிடமிருக்கும் ஆள், ஆயுத பலத்தைப் பொறுத்தவரை மட்டக்களப்பைப் பிடிப்பதும், கிழக்கை மீட்பதும் ஒரு பெரிய காரியமே இல்லைத்தான். ஆனால், நிலைமையைச் சரியாகக் கணிப்பீடு செய்யின், அதன் பெறுபேறாக ஒரு விடயம் தெளிவாகும். அது, கிழக்கை மீண்டும் கைப்பற்ற வேண்டுமானால், ஜெனரல் அனுருத்த அவர்கள் வடக்கைக் கைவிட வேண்டும் என்பதாகும். அதாவது, அவரிடமிருக்கும் படைபலம், ஒரே நேரத்தில் தமிழீழப் பகுதிகள் அனைத்தையும் கட்டுப்படுத்தப் போதுமானதல்ல.


எனவே, நடைபெறப்போவது இதுதான்! விடுதலைப் போராட்டத்தின் வெற்றியை நோக்கிய பரிணமிப்பு நகர்ச்சியாய், அந்த அற்புதம் பன்வருமாறு நிகழத்தான் வாய்ப்புக்கள் உண்டு.

போராட்டச் சக்கரத்தின் அச்சுமையமாக விளங்கும் வட பிராந்தியத்தை விழுத்தும்போது ஒட்டுமொத்தமான போராட்டமே முறியடிக்கப்பட, கிழக்கும் தானாகவே விழுந்துவிடும் என்ற எதிர்பார்ப்புடனேயே, கிழக்கிலிருநது வடக்கிற்குப் படைகளை நகர்த்தும் மூலோபாயத்தை ஜெனரல் அனுருத்த ரத்வத்த அவர்கள் கையாண்டார் என்பது பழைய கதை.

முழுப்பலத்தையும் பிரயோகித்தும் குடாநாட்டையே பூரணமாக விழுத்த முடியாமல் பரிதவிக்கையில், கிழக்கையும் இழந்துவிடும் தறுவாயை நோக்கி அவர் போய்க் கொண்டிருப்பது புதிய கதை. வடக்கில் பெற்ற இராணுவ வெற்றியை விடப் பூதாகரமான தான அரசியல்-இராணுவத் தோல்வி, அவர்கட்கு கிழக்கிலிருந்து எழுகின்றது. வடக்கைக் கைப்பற்றுவதைவிடவும் அரசியல் முக்கியத்துவம் மிக்கது கிழக்கு பாதுகாக்கப்படுவதே என்பதைச் சந்திரிகா அரசாங்கம் இனி உணரத் தலைப்பட்டாலும், காலம் ஏற்கெனவே பிந்திவிட்டது. இப்போது - எங்கிருந்து எங்கும் படைகளை நகர்த்த முடியாமலும், எதைக் கைவிட்டு எதைப் பாதுகாப்பது என்று புரியாமலும், சிங்கள தேசம் தம்மீது பொழியப் போகும் வசைமாரியைத் தவிர்க்க முடியாமலும், தம்மை நோக்கிவரும் மாபெரும் வரலாற்றுத் தோல்வியைத் தடுக்க முடியாமலும் - வடக்கு, கிழக்கு இரண்டையுமே இழந்துவிடும் கையறுநிலை, சந்திரிகா - அனுருத்த அரசாங்கத்தைச் சூழத் தொடங்கும் நாள், வெகு தூரத்தில் இல்லை. இதன் பெறுபேறாக -

காலம் செய்யும் கோலமாய், தோல்விகளால் நிறைந்த தமிழீழப் போருக்குள் தம் படைகள் ஆப்பிழுத்த குரங்காய் அகப்பட்டுக்கொண்டதை சிறீலங்கா தேசம் கண்ணெதிரே காணுகையில், தென்னிலங்கையை நெருக்கும் இராணுவ ரீதியான அழுத்தத்தினால் தம் நாட்டின் பொருளாதார சக்தி சிதைந்துருகுவதை நேரடியாகப் பட்டறிகையில், போரையே வெறுக்கும் மனவிரக்திகு தாம் உள்ளாகையில், சிங்கள தேசததை அழிவிற்குள் தள்ளிய வரலாற்றுப் பழியை, சிங்கள மக்கள் பண்டாரநாயக்காவின் புதல்வியில் சுமத்துவார்கள்; மைத்துனரின் மீதும் சுமத்துவார்கள்! O

**மட்டக்களப்பு மாவட்டத்தில் கனிந்துவரும் போராட்டத்தின் முன்னேற்றகரமான களநிலைமை மெல்ல விரிவடைய, கிழக்கு மாகாணத்தின் இராணுவச் சமநிலையில் பெரிய மாற்றங்கள் நிகழ்கின்றன.**



# பொருளாதார நெருக்கடிகள் சந்திரிகா அரசாங்கத்தை அசைக்குமா?

## போரில் அது, பெருந்தாக்கங்களை ஏற்படுத்துமா?

*தமிழீழப் போரின் தாக்க விளைவாக, சிங்கள தேசம் பெரும் பொருளாதார நெருக்கடிக்குள் சிக்குண்டிருப்பது எல்லாரும் தெரிந்ததே. இந்தப் பொருளாதார நெருக்கடியின் பாதிப்பினால், போர்க்களத்தில் தமிழர்களுக்குச் சார்பான மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும் என ஒருசாராரும்; இல்லை இல்லை, வெளிநாட்டு உதவிபெற்று அரசு தன் இழப்புகளை ஈடுசெய்யும் என இன்னொரு சாராருமாக எம் மக்கள், சந்தேகக் கருத்துக் கொண்டுள்ளனர். இதுபற்றி இந்தக் கட்டுரை ஆராய்கின்றது.*

சிங்கள அரசின் போர்ச்செலவு - வருடாவருடம் உயர்ந்தபடி - பெருந்தொகைப் பணத்தை விழுங்கிவருகின்றது. இதனால், சந்திரிகா அரசாங்கத்திற்கு ஒரு நிதிப்பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

இதேவேளை, சிறீலங்காவின் பொருளாதார கேந்திர நிலைகள்- அரசின் சொத்துக்கள் என்பவற்றின் மீது நடாத்தப்படும் இராணுவத் தாக்குதல்களாலும் அதன் எதிர்விளைவுகளாலும், அரசுக்கு பெருத்த நிதியிழப்பு ஏற்பட்டு வருகின்றது.

இவை தவிர, சம்பளஉயர்வு கோரி - அடுத்தடுத்து - நடாத்தப்படும் வேலை நிறுத்தங்களும், அரசுக் கம்பனிகளைத் தனியாருக்கு விற்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளைக் கண்டித்து மேற்கொள்ளப்படும் அரசு எதிர்ப்புப் போராட்டங்களும், பெருமளவு பண நஷ்டத்தை அரசாங்கத்திற்குக் கொடுத்து வருகின்றன.

இவைகாரணமாக, தீவிரமான ஒரு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்கவேண்டிய இக்கட்டான நிலையில், சந்திரிகா அரசாங்கம் உள்ளது. ஆயினும், இந்த உண்மையை எமது மக்கள் சந்தேகத்துடனேயே நோக்க விரும்புகின்றனர். அதாவது -

சந்திரிகா அரசாங்கம் சந்திக்கும் இந்தப் பொருளாதார நெருக்கடிகள், சிங்களப் படைகளின் போர் நடவடிக்கைகளைச் சீர்குலைக்கும் அளவுக்குச் செல்லுமா அல்லது வெளிநாட்டு உதவிகள்மூலம், அரசாங்கம் அந்த நெருக்கடியைத் தீர்த்துக்கொண்டு- காலம்பூராவும்- போரைத் தொடர்ந்து நடாத்துமா என்றவகையான ஐயங்களை, கணிசமான மக்கள் எழுப்புகின்றனர். இந்தக் கேள்விகளுக்கு விடைகூறுவதற்காக ஒரு நீண்ட விளக்கத்தை அளிக்கவேண்டியுள்ளது.

இன்றைய நிலையில், சிங்கள அரசின் பிரதான வேலை எதுவெனில், போர்செய்தல் என்பதேயாகும். அந்தளவுக்கு- அரசாங்கத்தின் அனைத்துக் கடமைகளையும் பின்தள்ளிவிட்டு - 'போர்செய்தல்' முன்னுக்கு வந்துள்ளது.

1978 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இன்றுவரை, சிறீலங்காவில் எந்த ஒரு பாரிய சமூக - பொருளாதார அபிவிருத்தித் திட்டமும் தொடங்கப்படவில்லை. சிறிய சிறிய திட்டங்களுடன் அரசாங்கம் நின்றுவிடுகின்றது.

இதன் அர்த்தம், அபிவிருத்தியின் உச்சநிலைக்கு சிறீலங்கா சென்றுவிட்டது என்பதோ அல்லது சிறீலங்கா நிபுணர் குழுவிடம் பிரமாண்டமான நல்ல திட்டங்கள் இல்லை என்பதோ அல்ல!

அப்படியாயின் என்ன காரணம்?

பாரிய அபிவிருத்தித்திட்டங்களை மேற்கொள்வதற்குத் தேவையான மலையளவு பணத்தை, அரசாங்கத்தினால் ஒதுக்கமுடியாதிருப்பதே அதற்குரிய பிரதான காரணியாகும்.

இதன் அர்த்தம், சிறீலங்கா அரசிடம் பணம் இல்லை என்பது அல்ல. வெளிநாட்டு உதவிகள் - அரசு வருமானங்கள் என்று, அரசிடம் சுளை சுளையாகப் பணம் உண்டு. ஆனால், போரில் பெட்டி பெட்டியாக பணத்தைக் கொட்டிச் செலவளிப்பதால் - அரசு பணப் பற்றாக்குறையில் சிக்குண்டுள்ளது என்பதே உண்மையாகும்.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பதுகளில், போர் தீவிரம் பெறத் தொடங்க, அரசு நிதிவளத்தில் பெரும் பகுதியை போருக்கே செலவிடவேண்டிய கட்டாயம், அரசாங்கத்திற்கு எழுந்தது.

இப்போது,

''போர்த்துறையில் சிறீலங்கா அபிவிருத்தி அடைந்து வருகின்றது!'' ஆனால், சமூக - பொருளாதாரத் துறைகளில் அது படுபின்னடைவை - அதனால் பாரிய பிரச்சினைகளை - எதிர்கொண்டுள்ளது.

இராணுவத்துறையை வளர்ப்பதற்காக சமூக - பொருளாதாரத் துறைகளைப் புறக்கணித்த நாடுகள், கெட்டுக் குட்டிச் சுவராகிப்போன கதைகள் வரலாற்றில் ஏராளம் உண்டு.

அனைவரது கண்ணுக்குள்ளும் குத்தும் சிறந்த உதாரணம், சோவியத் யூனியன் ஆகும்.

எதிராளியான அமெரிக்காவின் படை வல்லமைக்கு நிகராக சோவியத் யூனியன் வளர்ந்திருந்தது என்பதை, எல்லாரும் ஒப்புக்கொள்வர்.

ஆனால், பாதுகாப்புத்துறையை பிரமாண்டமாக வளர்க்கவேண்டும் என்பதற்காக அல்லது வளர்க்கவேண்டிய கட்டாயத்திற்குள் சோவியத் அரசு தள்ளப்பட்டதால், அது தனது சமூக - பொருளாதார நிலைகளில் மேம்பாடு காண முடியாத அளவுக்குப் பொருளாதார நெருக்கடிகளைச் சந்தித்தது. இதனால், சோவியத் நாட்டில் ஒரு அரசியல் குழப்பம் ஏற்பட்டது. அது, சோவியத் யூனியன் என்ற வல்லரசையே விழுங்கி - ஏப்பம் விட்டுவிட்டது! பொருளாதார நெருக்கடியும் அதனால் ஏற்பட்ட பல்வேறு வகையான அரசியற் குழப்பங்களும்தான், சோவியத்தின் வீழ்ச்சிக்குப், பிரதான காரணங்களாகும்.

ஒரு நாட்டில் ஏற்படக்கூடிய இராணுவ நெருக்கடிகளை அல்லது அரசியல் நெருக்கடிகளை, பொதுமக்கள் தங்களது கண்களாலேயே பார்ப்பார்கள்; எனவே, இராணுவ - அரசியல் நெருக்கடிகளை மக்கள் சுலபமாக விளங்கிக்கொள்வார்கள்.

ஆனால், ஒரு அரசு சந்திக்கும் பொருளாதார நெருக்கடி அவ்வாறானதல்ல; அது பொதுமக்களின் கண்களுக்கு இலேசில் புலப்படாது.

ஒரு நாட்டின் பொருளாதார நெருக்கடி என்பது புற்றுநோயைப் போன்றது. வெளிப்பார்வைக்கு நோய் தெரியாது. ஆனால், உள்ளிருந்து அது பரவிக்கொண்டிருக்கும்; இறுதியில், திடீரென ஒரு நாள் அது உயிரையே வாங்கிவிடும். அதனால்தான், பொருளாதார நெருக்கடி என்ற புற்றுநோய் தாக்கி - சோவியத் யூனியன் செத்து விழுந்த கடைசி நொடிப்பொழுதுவரை, அதன் சாவை எவராலும் எதிர்வுகூறவோ அல்லது நம்பவோ முடியாதிருந்தது.

புற்றுநோய்க் கிருமிகள் போல - வருடாவருடம் - சிறீலங்கா அரசாங்கத்தின் போர்ச் செலவினம் பெருகிவருகின்றது.

1 ஆம் ஈழப்போர்க் காலத்தில் (83 - 89) 360 கோடி ரூபாவாக இருந்த அரசின் வருடாந்த போர்ச்செலவினம், 2ஆம் ஈழப்போர் (90 - 94) காலத்தில் 1500 கோடி ரூபாவாக உயர்ந்தது. மூன்றாம் ஈழப்போரின் ஆரம்ப ஆண்டில் (1995) அது, 3500 கோடி ரூபாவாக அதிகரித்துவிட்டது.

இப் பெரும் செலவதிகரிப்பை வெளிநாட்டுக் கடன்கள்மூலமும் - அரசு பெறும் தேசிய வருமானத்தின்மூலமும் ஈடுகட்ட முயல்கின்றது என்பது உண்மை. ஆயினும், அந்த நிதியுங்கூட, அரசிற்குப் போதாதிருக்கின்றது என்ற உண்மையை எமது மக்கள் கவனத்தில் எடுக்கவேண்டும். அதனால்தான், அரசு நிறுவனங்களை வெளிநாட்டு முதலாளிகளுக்கு விற்று - அதன் மூலம் பணம் சம்பாதிக்கவும், பாதுகாப்பு வரி என்ற பெயரில் அனைத்துப்பொருட்களுக்குமான ஒரு விற்பனை வரியை விதித்ததன் மூலமும் மற்றும் பல்வேறு வரிச்சுமைகளை மக்கள் மீது சுமத்தியதன்மூலமும் தேவையான பணத்தைப்பெற, சந்திரிகா அரசாங்கம் முயற்சி செய்கின்றது.

இந்த முயற்சிகள் சிங்களப் பொதுசனங்கள் மீது பொருளாதாரச் சுமைகளைச் சுமத்திவிட்டுள்ளன. இதுகாரணமாக சம்பள உயர்வு கோரியும், மேலும் பல சலுகைகள் கோரியும், சிங்கள மக்களில் ஒருபகுதியினர் அரசாங்க எதிர்ப்புப் போராட்டங்களில் இறங்கியுள்ளனர்.

இதேவேளை, சிங்கள மக்களின் வாழ்நிலையை மேம்படுத்தவல்ல சமூக - பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள் நீண்டகாலமாக சீர்கெட்டிருப்பதால், சிங்கள மக்களது குடும்ப பொருளாதாரமும் பாரிய சிக்கலைச் சந்தித்துள்ளது.

மக்களின் குடும்ப பொருளாதாரத்திற்கு 'குளுக்கோஸ்' கொடுக்கும் நிலையில் சிறீலங்காவின் அரசுப் பொருளாதாரம் இல்லை இந்த நிலையில் போர் நீள நீள, அரசினதும் சிங்கள மக்களினதும், பொருளாதார நிலை, மிகவும் நெருக்கடிக்கு உள்ளாகப் போகின்றது.

ஒரு கட்டத்தில் அது, பாரியதொரு அரசியல் குழப்பத்தை தென் இலங்கையில் தோற்றுவிக்கும். அத்தகையதொரு கட்டம் வரும் போது, போரிலும் பல திருப்பு முனைகள் நிகழ இடமுண்டு. ஒன்று இரண்டு வருடங்களுக்குள் அந்த நிலைமை வந்துவிடும் என்று நாம் கனவுகாணக்கூடாது. அதேவேளை, அந்த நிலை எப்போது வரும் என்று எவராலும் எதிர்வு கூறவும் முடியாது. ஆனால், ஒன்றுமட்டும் உலகப் பொது உண்மை. அது யாதெனில், பொருளாதாரம் என்பதும் ஒரு நாட்டினதும் - அரசினதும் ஏன், குடும்பத்தினதும் முதுகெலும்பாகும்; அந்த முதுகெலும்பு முறிக்கப்படுமானால், வீழ்ச்சி அல்லது அழிவு, நாட்டின் முற்றத்திற்கு வந்து - வாசற் கதவைத் தட்டிக்கொண்டிருக்கும். கடந்த 5 ஆண்டுகாலப் போர், சிங்கள அரசின் பொருளாதாரத்தைச் சிதைத்து, சிறீலங்காவின் முதுகெலும்பை நோய்க்கு உள்ளாக்கிவிட்டது. வெளிநாட்டு உதவிகள்மூலம் இந்தப் பொருளாதாரப் புற்றுநோய்க்கு, சந்திரிகா அரசாங்கம் சில அறுவைச் சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்து, நோயை தற்காலிகமாகக் குணமாக்குவதில் வெற்றிபெற்றுவருகின்றது என்பதை மறுப்பதற்கில்லை.

எனினும், வெளிநாட்டு உதவிகள் என்ற வாய்ப்பு சிங்கள அரசிற்குத் தடைப்படுமாயின், தமிழினத்துடனான போரை



# சிங்கள அரசாங்கத்தின் பொருளாதாரப் பலமே தமிழர்களுக்கு எதிரான போரின் படைபலமாகும்; பொருளாதாரப் பலம் சிதறும்போதுதான், படைபலமும் சிதையும்!

நடாத்தும் வலிமையை - ஒரு குறுகிய காலத்துக்குள் - சிங்களப் படைகள் இழந்துவிடும்: இந்த உண்மையை எல்லாரும் ஒப்புக்கொள்வர்.

எனவே, எவ்வளவு காலத்திற்கு அல்லது எதுவரை, சிங்கள அரசுக்கு வெளிநாடுகள் பணத்தை அள்ளிக்கொட்டிக் கொடுக்கப்போகின்றன என்ற கேள்விக்கு விடைகாண்பது சிறந்தது.

எமது மக்கள் முன்வைக்கும் அரசியல் நியாயங்களோ அல்லது தமிழ் மக்கள் சார்பாக எழுப்பப்படுகின்ற மனிதாபிமானக் குரல்களோ, சிங்கள அரசுக்கு வரும் வெளிநாட்டு உதவிகளைத் தடுத்து நிறுத்திவிட மாட்டா. 'தமிழருக்கு எதிரான போருக்கு' என, எந்த ஒரு மேற்குநாடும் நிதி உதவிகளை வழங்குவதில்லை. ஆனால், தாம் கொடுக்கும் உதவிகளில் பெரும்பகுதி பணத்தை - சிங்கள அரசு தனது போர்த் தேவைகளுக்குப் பயன்படுத்துகின்றது என்ற உண்மையும் உதவிவழங்கும் நாடுகளுக்குத் தெரியும்; அதை அவை கண்டும் காணாமலும் இருக்கின்றன.

ஏழை நாடுகளான மூன்றாம் மண்டல நாடுகள் சந்திக்கும் சில நெருக்கடிகளுக்கு - மனிதாபிமான ரீதியில் - மேற்குநாட்டு அரசுகள் உதவி வழங்கும் நடைமுறை ஒன்று உண்டு. இத்தகைய மனிதாபிமான சேவைகளைத் தவிர்ந்த மற்றைய உதவிகளுக்கு, அதாவது, உதவிகள் என்ற கோதாவில் வெளிநாடுகள் வழங்கும் பெருந்தொகைப் பணத்திற்கு, ஒரு திட்டவட்ட நோக்கம் உண்டு; அது, உதவி வழங்கும் நாடுகளின் வர்த்தக நலன் சம்பந்தப்பட்டதாகும்.

தமது வர்த்தக நலன்களுக்கு அனுசரணையாக இருக்க, இலங்கைத்தீவின் அரசாங்கத்தைச் சம்மதிக்கச் செய்வதற்காக அல்லது சம்மதிக்கக்கூடிய ஒரு கட்டாயச் சூழலை உருவாக்குவதற்காக, அன்பளிப்புகள் - நீண்ட காலக் கடன்கள், வட்டியில்லாக் கடன்கள், அபிவிருத்தித் திட்டங்களுக்கான பணங்கள் - என்று உதவிகளை வழங்குவது என்பது, செல்வந்த நாடுகள் வகுத்துவைத்திருக்கும் ஒரு செயல்முறையாகும்.

ஏழைநாடுகளின் முன்னேற்றத்திற்கு உதவுதல் என்ற அம்சத்துடன், தமது வர்த்தக நலன்களையும் அடைந்துவிடுதல் என்ற வகையில்- இரட்டைக்குழல் துப்பாக்கியாக- வெளிநாட்டு உதவிகள்- செயற்படுகின்றன -

சிறீலங்கா அரசின் திறந்த பொருளாதாரக் கொள்கை மற்றும் தனியார் மயப்படுத்தல் உறுதிமொழிகளுமே, அதற்கு, வெளிநாட்டு உதவிகளைப் பெற்றுக்கொடுக்கும் அதிர்ஷ்ட தேவதைகளாக செயற்படுகின்றன.

ஆனால், போரின் தாக்கங்கள் வர்த்தக மையமான கொழும்பையும் அதன் சுற்றுப்புறங்களையும் பெரிதும் பாதித்துவருவதால், வெளிநாட்டு முதலீட்டாளர்கள், சிறீலங்காச் சந்தையை அச்சத்துடனும் ஐயத்துடனும் நோக்க ஆரம்பித்துவிட்டனர்.

இந்த நிலை எப்படியாவது மாற்றப்படவேண்டும் என்று, உதவி வழங்கும் நாடுகள் விரும்புகின்றன. போரில் வெற்றி பெறுவதன்மூலம், கொழும்பிலும் அதன் சுற்றாடலிலும் அமைதிக்காற்றைத் தவழவிடமுடியும் என்ற சந்திரிகா அரசாங்கத்தின் வாக்குறுதி, நிறைவேற்றப்படமுடியாத ஒன்று என, அனைத்து இராஜதந்திரிகளும் இன்று கருதுகின்றனர்.

இது ஒருபுறமிருக்க, சிங்களத் தொழிலாளர்கள் தொடர்பாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள், அதிருப்திப் பார்வை ஒன்றை வைத்திருக்கின்றனர். வேலைநிறுத்தப் போராட்டங்களை நடாத்தி, தமது உற்பத்திகளைப் பாதிக்கும் வகையில் அவர்கள் பொறுப்புணர்ச்சியற்று செயற்படுவதாக வெளிநாட்டு முதலீட்டாளர்கள் எரிச்சலடைகின்றனர். இதேவேளை, வெளிநாட்டு முதலீட்டாளர்களை அல்லது அவர்களது பிரதிநிதிகளை, உள்ளூர்த் தொழிலாளர்கள் பயமுறுத்தியும் தாக்கியும்வரும் வன்முறைச் சம்பவங்கள் கொழும்பில் அடிக்கடி நிகழ்கின்றன.

இவை வெளிநாட்டு மூலதனக்காரர்களை உற்சாகமிழக்கவைக்கும். சிறீலங்காவில் கைத்தொழிற் பயங்கரவாதம் நிலவுகின்றது என, ஒரு வெளிநாட்டு முதலீட்டாளர் குழு தன்னிடம் புகார் கூறியதாக, சிறீலங்காவின் கைத்தொழில் அமைச்சர் சி.வி. குணரட்ண அவர்களே கொழும்பில் பத்திரிகையாளர்களிடம் கூறிக் கவலைப்பட்டுள்ளார். அண்மையில் இலங்கை மின்சார சபை ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருந்தபோது, தமது மின்சார சபையின் மின் உபகரணங்களை அடித்து நொருக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்விதம் முதலீடுகளை நாசம்செய்யும் வன்முறைவாதிகளாக சிங்களத் தொழிலாளர்களே விளங்குகின்றனர் என்ற உண்மை, வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குக் கசப்பானதே.

இந்த வகையில், போரும் மூர்க்கக் குணங்கொண்ட சிங்களத் தொழிலாளர்களது செயல்களும், வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஓட ஓட விரட்டிக்கொண்டே இருக்கப்போகின்றன. இந்த நிலை தொடர்ச்சியாக இருக்குமானால், வெளிநாடுகளின் வர்த்தக நலனுக்கு பெரும் பாதிப்பு ஏற்படும். இந்தநிலையில், சிறீலங்கா அரசுக்கு, உதவிகள் என்ற கோதாவில் 'சுளை சுளையாக' பணத்தை அள்ளிவழங்க, உதவி வழங்கும் நாடுகள் தயாராக இருக்கமாட்டாதென்பது உறுதியாகும்.


இதேவேளை, அரசநிறுவனங்களைத் தனியாருக்கு விற்கும் 'தனியார் மயப்படுத்தல்' திட்டத்திற்கு, உள்நாட்டில் பாரிய எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்த எதிர்ப்புகளையும் பொருட்படுத்தாது, அரசநிறுவனங்களை விற்றுவிட அரசாங்கத்தால் முடியும். இவ்விதம் விற்கப்படுவதற்கென இருக்கும் அரசுடைமைகளின் மொத்தப் பெறுமதி, 2100 கோடி ரூபாக்கள் ஆகும். இது அரசின் ஒருவருட பாதுகாப்புச் செலவினத்தையே ஈடுசெய்யப் போதாது. இந்த நிலையில், எஞ்சியுள்ள அரசச் சொத்துக்களையும் வெளிநாட்டு முதலாளிகளுக்கு விற்று, மேலும் சில ஆயிரம் கோடி ரூபாக்களை அரசாங்கம் சம்பாதிக்க முடியும். அதுவும் ஒன்று இரண்டு ஆண்டுகளில் செலவளித்து முடிந்துவிடும்.

அதன்பின்னர், 'காணிவிற்று வழக்குப்பேசிய கமக்காரனின்' நிலையில் இருக்கப்போகும் சிறீலங்கா அரசு, தனது போர்த் தேவைக்குவேண்டிய பணத்தை எங்கிருந்து பெறப்போகின்றது?

சிங்கள மக்களுக்கு உயிர்நிலையாக இருக்கும் 'இலவசங்கள்' மீது சிலவேளை, சிறீலங்கா அரசாங்கம் கைவைக்கலாம். இலவச உணவு - இலவசக் கல்வி - இலவச மருத்துவம் - இலவச பாடப்புத்தகம் - இலவச சீருடை இலவச மதிய உணவு, மற்றும் விவசாயப் பொருட்களின் விலைகளில் குறைப்புச்செய்யும் முகமாக அரசாங்கத்தால் ஒதுக்கப்படும் மானியச்செலவுகளையும் இல்லாது செய்வதன்மூலமும், ஆண்டுதோறும் ஒருசில ஆயிரம்

(...ஆம் பக்கம் பார்க்க)

பொருளாதார நெருக்கடி புற்றுநோய் போன்றது; அது கண்பார்வைக்குத் தெரியாது - உள்ளிருந்து பரவும்; திடீரென ஒருநாள்.... எதுவும் நிகழும்!



# பொங்கியெங்கள் ஊர்புகவே போர்க்கருவி தூக்குவோம்
# போரில்பகை தொலையுமட்டும் ஊரினுள்ளே தாக்குவோம்!

வெள்ளிநிலா பால்சரித்து அங்குவிளை யாடும்
வீசுகின்ற காற்றுமெமைத் தேடிவிட்டுப் போகும்
பொன்னலரி பூச்சொரிந்து எம்வரவைப் பார்க்கும்
போகவழி ஏதுமின்றிக் கண்ணிரண்டும் வேர்க்கும்.

ஊர்மனைக்குள் வாழ்பவரும் வேரிழந்த பேர்கள்
ஊளையிட்டுச் சாகிறதாம் நாம்வளர்த்த நாய்கள்
நாமெழுந்து போர்புரிந்தால் நாளையெங்கள் ஊரில்
நம்பியெழு ஊரினுக்குள் நாம்புகுவோம் தேரில்.

எங்கோ பாட்டுக் கேட்கிறது:
எம்மில் எத்தனைபேர் அர்த்தமுணர்ந்தோம்?
நரகில் கிடந்துழலவும்
நாக்குக்கேதும் படைக்கவுமா நாம்பிறந்தோம்?
உருகியுருகி ஒன்றுமில்லாததாகி
எரியவா உயிரெடுத்தோம்?
வாழ்வு வெறும் வரண்டநிலமாகி
தாழ்வுற்றுப் போகவா தமிழரென்றானோம்?



திருவோடும் கையுமாக தெருத்தெருவாக அலையவா
கருவுற்றுப் பெற்றாளெம் தாய்?
குயிலிருந்துபாடாத கொம்பாகிப் போகவா
தளிரீன்றோம் நாம்?
வசந்தம் தழுவாது போனதா எம்பூக்காடு?
ஆமெனினும் அடங்கிப்போ.
இல்லையெனில் எழுந்து வா.
எதுவெனினும் முடிவெடுக்க இதுதருணம்.
முடிசுமந்த தலையும்
செங்கோலேந்திய கையுமாக
கொற்றப்பந்தர் வீற்றிருந்த இனத்தின் வேர்நுனி
நீர்குடிக்கவலுவற்று நெருப்பிலட வீழ்வதா?
புழுதி பறக்கக் குதிரைப் படைபோன தெருவிலின்று
குருதிச் சேறு.
தேருலாவிய வீதியில் யாரோவொருவனின் கவசவாகனம்.
பகைவென்று வரும்போது
மகரதோரணம் விளங்கிய வாசலில்
எதிரியின் காவலரண்
எப்படிப் பொறுப்பாய் மகனே!
எழுக என் மகளே!
நிலத்தில் இறங்குக] இளைய விழுதுகள்.
களததில் இறங்குக தமிழர் கொழுந்துகள்.
நிமிர்ந்து கொள்ளுங்கள்.
முகிலுமக்கு முகம்துடைத்துக் கொள்ளட்டும்.
எல்லாமிழந்து இல்லாதாரானோம்.
உயிர்க்கூட்டை விட்டுத்தாழ்வாரத்தில் வைத்துவிட்டு
சதைக் கூடென ஜடமாகிப் போனோமெனினும்
பணியோம் நாம்.
இன்னும் வரட்டும் ஏழ்மை.
ஆயினும் இழிவுற்றுனக்கு ஏவல் செய்யோமென
எதிரிக்கு உணர்த்துவோம் வருக.

பிடிசாம்பலானதா எம்பெருவாழ்வு?
இல்லை ... இல்லையடா.
திக்கெட்டுமதிர பகைக்கொன்றுரைப்போம்.
அறுகுப்புல்லின் மயிரைப் பொசுக்கலாம்
வேரையறுத்து வீழுத்தவா முடியும்?
எம்முற்றமுழுது எருக்கலை நாட்டலாம்
காடாகிப் போகலாம் தாய்மடி.
மீண்டுமெழுவோம் எம்முற்றத்தில்
உன் மூச்சுத்திணற முளைப்போம்.
இருந்துபார் பகையே! இது நடக்கும்.
எம்மைக் கொல்வாய்
எம் பிள்ளைகளையும் கொல்வாய்
கொன்றெங்கே புதைப்பாய்?
நீ புதைக்குமிடம் புதைகுழியல்ல...
அடைவைக்கும் இடமென்று அறிவாய் விரைவில்
கல்லாலெறிந்து கலைத்தாய் எம்மை
உள்ளே பிடித்துச் சென்றாய் உறவை
இரண்டுமே உனக்கு எமனாச்சு.
உள்ளும், புறமும் உனக்கு நெருப்பு மூட்ட
நீயே வழிசமைத்துத் தந்துள்ளாய்.
உன் சீருடையில் தீப்பிடிப்பது தெரியாமல்
சிரித்தபடி ஆரியகுளத்தடியில் அமர்ந்துளாய்,
ஐயோ பாவம்.
எரிமலை வாசலை அடைத்தபடி
இன்னும் எத்தனை நாளிருக்கும் உத்தேசம்?
ஆனந்தவாழ்வு அடிவரைவற்றி
வறுமையுற்றுளது எம் நாளாந்தம்.
இல்லிழந்த வாழ்வே இருப்பாகிக் கழிந்தெம்
“ வாழ்வுமுற்றிற்று ” எனத் திரை வீழுந்து போமா?
ஊர்மண்ணை எம் கால்கள் தொடாமலே
இங்கோர்சுடலையில் எரியுண்டு போவோமா?
“ பாறைபிளந்து பயிர்வளர்த்தோன் ” பரம்பரை
சோர்ந்தோர் மூலையில் கிடத்தலென்ன விதி
எம்மை ஊரிருந்து விரட்ட
அவனுக்கென்ன அதிகாரம்?
கூடியிருந்தும், தனித்தும்
பாடியிருந்து மகிழும் சூழலே பரவசம்.
வெறும் நிலமல்ல எம்ஊர்.
மண்மீது விரியும் ஆனந்தச் சிறகே
ஊர்வாழ்வின் வேரென்றாகும்
இரண்டுமே இல்லையென்றாயின்
ஊரென்பது வெறும் கல்லும் மண்ணும் கலந்த
கலவை யென்றாகிவிடும்.
விண்ணதிர, மண்ணதிர, விரிந்தகடலதிர
கண்திறந்து வருகநம் கருப்பை உயிர்கள்
கொற்றவை பெற்ற குழந்தைகளென
நெற்றிக்கண் திறந்து நிமிருக நம் பரம்பரை.

## உலைக்களம்

– வியாசன்

என் பிள்ளை களத்தில்......
என் பிள்ளை களத்தில்......
என் பிள்ளையும் களத்திலென்று
எல்லோரும் சொல்கின்ற எழுச்சிநிலை கைவந்தால்
மண்வந்த பகையன்றே மடிந்துவிழ மாட்டாதோ?

பொங்கியெங்கள் ஊர்புகவே போர்க்கருவி தூக்குவோம்
போரில் பகை தொலையுமட்டும் ஊரினுள்ளே தாக்குவோம்
தம்பிபிர பாகரனின் தானையிலே சேருவோம்
தங்கத்தமிழீழம் வரும் நேரம் வரை சீறுவோம்.

# பாலைவனத்தில் சமாதான ஒப்பந்தம்

## செய்தி ஆய்வு

இஸ்ரேலில் பொதுத்தேர்தல் நடந்து முடிந்துள்ளது.

பென்ஜமின் நிடன்யாகு என்பவர் புதிய பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் இஸ்ரேல் - பலஸ்தீன அமைதி உடன்பாட்டின் சில அம்சங்களை, இவர் வன்மையாக எதிர்த்தவர்; நடந்துமுடிந்த தேர்தற் பரப்புரையின்போது, இந்த நிலைப் பாட்டையே முன்நிறுத்திப் பேசிவந்தார்.



இஸ்ரேலின் புதிய பிரதமர் பென்ஜமின் நிடன்யாகு

பென்ஜமின் நிடன்யாகுவின் தேர்தல் வெற்றி இஸ்ரேல் - பலஸ்தீன அரசியல் ஒப்பந்தத்திற்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துமா என்ற கேள்வி, இப்போது எழுப்பப்பட்டுள்ளது.

முன்னைய இஸ்ரேலியப் பிரதமர் றாபின் அரசாங்கத்திற்கும், பலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையில் நடந்த சமாதானப் பேச்சு வார்த்தையின் விளைவாகப் பலஸ்தீன மக்களுக்கு · அவர்களது குறித்த சில பகுதிகளில் - வரையறுக்கப்பட்டவகையில் தன்னாட்சி உரிமை வழங்கப்பட்டிருந்தது. பலஸ்தீனக் குடியரசு என்று அழைக்கப்பட்ட அந்தப் பகுதியின் ஜனாதிபதியாக திரு யசிர் அரபாத், அமோக பெரும்பான்மையுடன் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

அந்த உடன்படிக்கையின்பிரகாரம், ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளில் இருந்து இஸ்ரேலியத் துருப்புக்கள் படிப்படியாக விலக்கிக்கொள்ளப்படவேண்டும். கிப்ரோன் என்ற நகரைத் தவிர்ந்த - உடன்பாட்டின்படி - பலஸ்தீனிய நகரங்களில் இருந்து துருப்புக்கள் வெளியேறிவிட்டன. கிப்ரோனில் இருந்து துருப்புக்கள் வெளியேறக்கூடாது என்பது, நிடன்யாகுவின் தேர்தற் பரப்புரை நிலைப் பாடாகும்.

இதேவேளை, ஆக்கிரமிக்கப்பட்ட பலஸ்தீனப் பகுதிகளிலுள்ள-இஸ்ரேலிய அரசாங்கங்கள் நடாத்திய - யூதக் குடியேற்றங்களும் அப்புறப் படுத்தப்படும் என்பதும் உடன்பாட்டின் ஒரு உறுதிமொழியாகும். இந்த அம்சத்தையும் நிடன்யாகு தீவிரமாக எதிர்த்துவந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நிடன்யாகுவின் நிலைப்பாடு ஒருபுறமிருக்க, இஸ்ரேலின் முன்னாள் பிரதமர்களில் ஒருவரான யிட்சக் சமிர். நிடன்யாகுவின் உடன்படிக்கை விரோதப் போக்கைப் பகிரங்கமாக ஆதரித்து, புதிய பிரதமரை உற்சாகப்படுத்த முயன்றுள்ளார். ''கைப்பற்றப்பட்ட பகுதிகளில் யூதக் குடியேற்றங்களைக் கட்டாயம் தொடரவேண்டும்'' என, அவர் நிடன்யாகுவைக் கேட்டுக் கொண்டுள்ளார். யூதப் பேரினவாத நிலைப் பாட்டை தேர்தற் பரப்புரையின்போது கடைப் பிடித்த லிக்குவிட் கட்சித் தலைவர் நிடன்யாகு, வெற்றிபெற்றுப் புதிய பிரதமராகவும் அரியணை ஏறிவிட்டார்.

பலஸ்தீன மக்களுக்கு உரிமைகள் வழங்கு முகமாகச் செய்யப்பட்ட அரசியல் ஒப்பந்தத்தை, நிடன்யாகு என்ன செய்யப்போகின்றார்? தேர்தற் பரப்புரையின்போது கடைப் பிடித்த அதிதீவிர நிலைப்பாட்டையே, நடைமுறையிலும் செயற்படுத்தப்போகின்றாரா? இவ்விதம் நடக்க முற்படுவாராயின் இஸ்ரேல் - பலஸ்தீன உடன்படிக்கை முறிந்துபோகக்கூடிய வாய்ப்பும் உள்ளது என, உலக அரசியல் அவதானிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை,

இஸ்ரேலின் பிரதமராக யார் தெரிவு செய்யப்பட்டாலும், அவரால் இந்த அரசியல் ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்துவிட முடியாது என, பலஸ்தீன இயக்கத் தலைவர்கள் நம்பிக்கையுடன் கூறுகின்றனர். ஏனெனில், பல மேற்கு நாட்டு அரசுகளும் இந்த ஒப்பந்த உருவாக்கவில் நேரடியாகவே சம்பந்தப்பட்டுள்ளன என்கின்றனர் அவர்கள்.

எது எப்படி இருப்பினும்,இந்த உடன்படிக்கையின் முக்கிய அம்சங்களைக் கண்டன விமர்சனம் செய்துவந்த வலதுசாரிக் கடும் போக்காளரான நிடன்யாகுவை 50.4 வீதமான யூத வாக்காளர்கள் ஆதரித்திருப்பது, இஸ்ரேல் - பலஸ்தீன உடன்படிக்கைக்கு ஒரு நெருக்கடியைக் கொடுத்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

மேற்கு ஆசியப் பிராந்தியத்தில் அமைதி நிலவவேண்டும் என்பது, அமெரிக்கா உட்பட மேற்கு நாட்டு அரசுகளின் விருப்பமாக உள்ளது. அவற்றினது வர்த்தக முயற்சிகளுக்கும், கைத்தொழில் மேம்பாட்டிற்கும் 'மத்திய கிழக்கில்' அமைதி நிலவுவது முக்கியம்.

இதேவேளை, அமெரிக்கா உள்ளிட்ட மேற்கு நாடுகளின் அனைத்துவகை உதவிகள் மற்றும் அரசியல் ஆதரவுகளில்தான், 'இஸ்ரேல்' என்ற நாட்டின் இருப்பும் பெரும்பாலும் தங்கியுள்ளது. எனவே, இத்தகைய அரசுகளின் பங்குபற்றுகையுடன் செய்யப்பட்ட இஸ்ரேல் - பலஸ்தீன ஒப்பந்தத்தை, நிடன்யாகு விரும்பினாலும்கூட முறிக்கமுடியாது போகும் என்று, பலர் அபிப்பிராயம் கூறுகின்றனர்.

இந்தவகையில் இஸ்ரேல் என்ற நாட்டின் முதல்தர குடிமக்களான யூதர்களின் நிலைப்பாட்டின்பிரகாரம், சமாதான ஒப்பந்தம் பாலைவனத்தில் கைவிடப்பட்டுள்ளது. ஆயினும், மேற்கு நாடுகளின் பேரம்பேசும் பலத்தை நம்புபவர்கள், பாலைவனத்திலுள்ள 'பாலைவனச்



பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் அரபாத்

சோலை'யில் இப்போதும் உடன்படிக்கை பத்திரமாகவே உள்ளது என நம்புகின்றனர்.

செய்யப்பட்ட ஒப்பந்தத்தின் தலைவிதி இவ்விதம்,இருக்கும்போது, பலஸ்தீனக்குடியரசின் தலைநகரம் தொடர்பான முன்னைய பிரகடனத்தை, யசிர் அரபாத், இப்போதும் வலியுறுத்தி உள்ளார்.

இஸ்ரேலிய அரசின் முழுமையான கட்டுப் பாட்டிலுள்ள கிழக்கு ஜெரூசலேம் நகர்தான் தமது குடியரசின் தலைநகரமென, பலஸ்தீன விடுதலை இயக்கம் வலியுறுத்தி வருகின்றது. ஆனால், ''யூத அரசின் பிரிக்கமுடியாத தலைநகர்தான் ஜெருசலேம்'' என்று, முன்னாள் இஸ்ரேல் பிரதமர் 'சமிர்' வலியுறுத்தி இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இனி வரப்போகும் சில மாதங்கள் 'மத்திய கிழக்கு' அரசியலுக்குக் 'கோடைகாலமா'கவே அமையப்போகின்றது. ○

# பொருளாதார நெருக்கடிகள்...

( 7 ஆம் பக்கத் தொடர்ச்சி )

கோடி ரூபாக்களை அரசாங்கத்தால் சேமிக்க முடியும். ஆனால், இந்த் இலவசத் திட்டங்கள்மீது கைவைத்தால், ஒருசில வாரங்களுக்குள்ளேயே சந்திரிகாவின் அரசாங்கம் கவிழ்ந்துவிடும் என்று துணிந்துகூறலாம்.

இதற்கு சில நல்ல உதாரணங்கள் உண்டு. அரிசியின் ,விலையைச் சிறிது அதிகரித்த டட்லி சேனநாயக்காவின் அரசாங்கத்தையும்; வைத்தியசாலையில் மருத்துவம் பார்ப்பதற்குரிய கட்டணமாக, 25 சதத்தை ஒவ்வொரு நோயாளரிடமும் அறவீடுசெய்த சிறீமாவோவின் ஆட்சியையும் சிங்கள மக்கள் வெறுத்து ஒதுக்கியிருந்தனர் என்பது, சிறீலங்காவின் வரலாறு. 77ஆம் ஆண்டு ஜே. ஆர். ஆட்சியைப் பிடித்ததும், 25 சத திட்டத்தை உடனடியாக ரத்துச் செய்தார்; இது சிங்கள மக்களின் ஏகோபித்த பாராட்டைப் பெற்றது. என்பதை, இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். எனவே, இலவசத் திட்டங்களின்மேல் கைவைக்கச் சந்திரிகா அம்மையார் துணிவாரா அல்லது அது நடக்கக் கூடிய காரியமா?

அப்படியாயின், போர்ச்செலவு அதிகரிப்பை சிறீலங்கா அரசாங்கத்தால் எப்படிச் சமாளிக்க முடியும்?

5 வீதமாகத் தற்போது அறவிடப்படும் பாதுகாப்புவரியை 10 அல்லது 15 வீதமாக அதிகரிப்பதன்மூலமும், குறித்த ஒரு தொகைப்பணத்தை அரசாங்கம் திரட்ட முயலலாம். இதைவிட, அனைத்துப் பொருட்களுக்கும் - பிரத்தியேகமானமுறையில் - விற்பனை வரிகளை விதித்தும் ஒருதொகைப் பணத்தை, ஆண்டுதோறும் பெற அரசாங்கம் முயலலாம். இவ்விதம் நடந்தால், அது சாதாரண சிங்கள மக்களின் அன்றாட வாழ்க்கையையே இமாலய நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுவிடும். இதைச் சகித்துக்கொண்டு சிங்கள மக்கள் - சும்மா இருக்கமாட்டார்கள்.

அத்துடன் முன்னைய ஆண்டுகளைப்போல, நாட்டின் அபிவிருத்திக்கென - எழுந்தமானமாக - எந்த ஒரு நாடும் பணத்தைக் கொட்டிக் கொடுக்கும் நிலையில், இப்போது இல்லை. குடா நாட்டை ஆக்கிரமித்த பின்னர், அதன் புனரமைப்பிற்கு என்ற போர்வையில், பெருந்தொகை நிதியை ஜப்பானிடம் இருந்து சந்திரிகா அரசாங்கம் பெற முயற்சித்தபோது,அது தோல்வியையே கொடுத்தது. சமாதானம் ஏற்பட்டால்தான் புனரமைப்பிற்கான பணத்தைத் தரமுடியும் என, ஜப்பான் வெளிப்படையாக அறிவித்துவிட்டது. எதிர்பார்த்த பெருந்தொகைப் பணம் கைகளிற்கு வராதுபோனமை, சிறீலங்காவிற்குப் பலத்த ஏமாற்றத்தை வழங்கிவிட்டது! இவ்விதம், கிடுகிடுவென உயர்ந்துசெல்லும் போர்ச் செலவைச் சமாளிக்க, இனிவரும் வருடங்களில் சிறீலங்கா அரசு திக்குமுக்காடவேண்டிய நிலை, நிச்சயம் உருவாகும்.

86இல் 360 கோடி ரூபா; 93இல் 1500 கோடி ரூபா; 95இல் 3500 கோடி ரூபா என, வருடாந்த பாதுகாப்புச்செலவினம் உயர்ந்து செல்லும் போக்கைப் பார்க்கும் போது, இன்னும் 4 வருடங்களில் - 2000 ஆண்டில் - அது, ஆண்டுக்கு பத்தாயிரம் கோடி ரூபா என்ற தொகையை எட்டலாம்.

இந்தப் பணமலையை அரசாங்கம் எங்கிருந்து கிண்டி எடுப்பது? கிண்டி எடுக்கும் வழிகளையும், போரும் அதன் சுமைகளும் படிப்படியாகத் தடுத்துவிடும்.

போதிய நிதிவளம் இல்லாதுவிடின், தமிழினத்திற்கு எதிரான போரைத் தொடர்ந்து நடாத்துவதில் அரசாங்கத்திற்கு பல சிக்கல்கள் தோன்றும்; அவை தமிழரின் விடுதலைப் போருக்குச் சார்பான களநிலைமையை உருவாக்கிவிடும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் இராணுவ இலக்காக, அரசுப் பொருளாதாரம் குறிவைக்கப்பட்டுவிட்டது. இலக்கு வீழ்த்தப்படும்வரை உறுதியுடன் போராடவேண்டியது, தமிழினத்தின் வரலாற்றுக் கடமை! ○

# பகலும் இரவாகிவிட்ட நாடு!

வே. பாலகுமாரன்

அடேயப்பா! எப்படிப்பட்ட வெற்றி அது? ''யாப்பபட்டுண'' தாம்பாளத்தில் வைக்கப்பட்டு சிங்களத்தின் மகாராணி-நவீன விகாரமகாதேவி - சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம், சிங்களப் படைகளின் சேனாதிபதியால் வழங்கப்பட்டுவிட்டது. 2500 ஆண்டு கால வரலாற்றின் புதிய சாதனை- சிங்களவரின் இனப் பெருமை - சிங்கக் கொடியாக, பனைவளரும் பூமியிலே பறக்கிறது. கிடுகு வேலிக்குள் எட்டிப் பார்க்கும் தமிழ் மக்கள் சிங்கள அரசின் பக்கம்; புலிகள் வன்னிக்குத் தப்பியோட்டம் - இனியென்ன? விண்ணிற்கும் மண்ணிற்கும் சிங்களம் குதிக்கவேண்டிய வேளை; வெற்றிக்களிப்பில் மருமகளையும் மாமனையும் உச்சியில் தூக்கிவைத்துக் கொண்டாடும் நேரமல்லவா இது? முப்படைகளின் பிரதம தளகர்த்தரான சந்திரிகா அம்மையாரின் வெற்றிக் கதையிது; ஆனால், சிங்களத்தின் கதை எப்படியிருக்கிறது?

**அரசுக்கும் மக்களுக்கும் இடையேயான முரண்பாடு தொழிலாளர், அரசு ஊழியர் போராட்ட வடிவிலே மேலெழுகின்றது; இதற்கு இயற்கையும் துணைபோகின்றது.**

வரலாற்றுக்காலப் 'பகையை வென்றுவிட்டதாகக் கூறிக்கொள்ளும் சிங்களம் வெற்றிக் களிப்பில் திளைப்பதாகத் தெரியவில்லை; வாண வேடிக்கைகளும், வரவேற்புக்களும் அங்கு காணப்படவில்லை; ''கட் அவுட்''களும், களியாட்டங்களுங்கூடத் தென்படவில்லை; வாழ்த்துக்கள், வரவேற்புப் பாக்கள் எதுவுமே இசைக்கப்படவில்லை. களைத்த முகத்துடன், அழுக்கு உடுப்புடன், கவலை தோய்ந்தவனாக அல்லவா சிங்களவன் காணப்படுகிறான்! பெரும் குழப்பகரமான அமைதி; அதுவும் புயலுக்கு முன்னையதான அமைதி. சூனியத்தை நோக்கி நகர்கின்ற நாடாகவே இன்னமும் சிறீலங்கா - ஏனெனில், பட்டப் பகலில் இரவைக் காணும் நாடல்லவா அது இன்று! எனவே, வெற்றி நாயகனாக, புது மாப்பிள்ளையாக உலா வர வேண்டிய56 வயது ரத்வத்த, இருட்டில்மறையும் திருடன் போல் இன்றிருக்கின்றார். காலையில் கதாநாயகன்; மாலையில் வில்லன்- இரட்டை வேடம் அவருக்கு. எவராலும் ஈட்ட முடியாத இராணுவ வெற்றியை ஈட்டிய தலைவிக்கோ ''ஆளத் தெரியாத அம்மணி'' என்று பட்டம். எப்படிப்பட்ட முரண்பாடு இது? இது மட்டுமா ஒரு முரண்பாடு; இன்னும் எத்தனையோ! இயற்கையின் சீற்றமும் வரலாற்றின் சீற்றமும் இணைந்ததால் வந்த வினையிது. இயற்கையின் சீற்றம் இன்னும் சில காலமே நீடிக்கும்; ஆனால் வரலாற்றின் சீற்றம்? - சிங்களத்தின் தலைவிதியைத் தலைகீழாக்கும்வரை நீடிக்கும்.

''கடந்த 15 வருட வரலாற்றில், ஏதாவது நெருக்கடியொன்றைச் சந்திக்காத மாதம் என்று ஒன்றிருக்கிறதா?'' எனக் கழிவிரக்கத்தில் கேள்வி எழுப்புகிறார் சண்டே ஐலண்ட் ஏட்டின் ஆசிரியர். ''இப்போது எல்லாவற்றிற்கும் மேலாக இயற்கையுமல்லவா வஞ்சித்துவிட்டது'' என்கின்றார் அவர். இப்பொழுது மிகக் கூர்மையடைந்து சிங்களத்தில், அரசுக்கும் மக்களுக்கும் இடையேயான முரண்பாடு தொழிலாளர், அரசு ஊழியர் போராட்ட வடிவிலே மேலெழுகின்றது. இதற்கு இயற்கையும் துணை போகின்றது. மொத்த மின் விநியோகத்தில் 85 விழுக்காடு நீர் மின்வலு பொய்த்துவிட்டது. 100 வருட மழைவீழ்ச்சிப் பரம்பல், கடந்த வருட வடகீழ் பருவ மழை பொய்த்தமை ஆகியவற்றின் அடிப்படையில் பார்க்குமிடத்து, எதிர்வரும் செப்ரெம்பர் வரையாவது மின் நெருக்கடி ஏதோ வகையில் நீடிக்கும் என்கின்றார் ஆய்வாளர் ஒருவர். மரத்தால்விழுந்தவனை மாடேறி மிதித்த கதையாகிவிட்டது, இன்று சிங்களத்தின் பொருண்மிய நிலை. வாணிகத் துறையைப் பொறுத்தவரை – குறிப்பாக உள்நாட்டு ஏற்றுமதிக் கைத்தொழில்துறையில்– நாளாந்தம் 35 கோடி நட்டம். சிறீலங்காவில் மொத்தமாக உள்ள 6400 கைத்தொழில் முயற்சியாளர்களில், 400 முயற்சியாளரே பெரிய கைத்தொழில் முயற்சியாளராவர்; ஏனைய 6000 பேர் நடுத்தர, சிறிய மட்டத்தினராவர். இவர்களிடம் ஏது பாரிய மின்பிறப்பாக்கிகள்? மின்பிறப்பாக்கியைப் பயன்படுத்தும் பெரும் கைத்தொழில் முயற்சியாளருக்குக்கூட, நாளாந்தம 25 விழுக்காடு நட்டம். பங்குச் சந்தை மிக மோசமான நெருக்கடியில்; பல தொழிற்சாலைகள் மூடும் நிலையில்; பல்லாயிரம் தொழிலாளர் வேலையற்றுப்போகும் நிலை என - இவ்வாறாக - இயற்கை வஞ்சித்ததால் ஏற்பட்ட விளைவு நீள்கின்றது.

ஆனால், ஏற்கெனவே போரால் பொருண்மியம் நலிந்துவிட்ட நிலையில், கூர்ந்து அவதானித்தால், மீளமுடியாத நச்சு வட்டமொன்றில் சிங்களம் சிக்கிவிட்டமை புலப்படும். தொழிலாளியின் எதிர்ப்பு, வேதன உயர்வு, மக்கள் வெறுப்பு போன்றவற்றை அமைதிப்படுத்த, போர்ச் செலவு மிகக் குறைந்த மட்டத்தில், குறைக்கப்பட வேண்டும் - அவ்வாறு குறைப்பதாயின், எப்போது முடிவுறும் என எவருக்கும் தெரியாத பெரும் போரொன்றைப் புலிகளோடு நடத்த வேண்டும் - அதற்கும் அரசை நாளாந்தம் கொண்டுநடத்தவும், பல்லாயிரம் கோடி வெளிநாட்டு உதவியாக - கடனாகப் பெற வேண்டும். அவ்வாறு பெற, கடன் தரும் முதலாளிய நாடுகள் சார்பில் உலக வங்கி விதிக்கும், தனியார் மயமாக்கல்திட்டத்திற்குச் சம்மதிக்க வேண்டும். அவ்வாறு தனியார் மயப்படுத்தப்படும்போது, முதலாளியப் போட்டி காரணமாகப் பல்வேறு மோசடிகளும் ஊழல்களும் தலைவிரித்தாடும் - பாதிக்கப்படும் ஊழியர் போர்க்கொடி உயர்த்துவர் - அதனைத் தடுக்க கொடிய சருவாதிகாரியாக அம்மையார் மாறி, அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விடவேண்டும். அடக்குமுறை இறுதியில், அழிவுக்கே இட்டுச் செல்லும் என்பது வரலாற்று விதி.

இதுதான் இன்றைய சிங்களத்தின் கதை. எவ்வளவுதான் பின்னடைவுகள் ஏற்பட்டாலும் புலிகளின் புதிய போருத்திகள், விரிந்து பரவும் போர் அரங்கு, போருக்குச் செலவிடும் பல்லாயிரம் கோடி ரூபாவில் ஒரு ரூபாயைத் தன்னும் குறைக்க முடியாத நிலையில், போரும்முடியாது; பொருண்மியமும் மேம்பாடடையாத நிலையில் - காரியத்தில் கண்ணாக இருக்கும் உலக வங்கியோ, சிக்கலுக்குரிய தனியார் மயமாக்கலை வேகமாக்க அழுத்தம் கொடுக்கின்றது. யாழ்ப்பாண வெற்றியை தனது அரசியல் முதலீடாக மாற்ற, LECO எனப்படும் லங்கா மின்சார நிறுவனத்தை விற்க முயன்றபோதே, நாட்டில் பகலும் இரவும் ஒன்றானது. ஏற்கெனவே, இலாபமீட்டும் முக்கியமான துறைகளைத் தனியார் மயமாக்குவதைத் தடுப்பதற்கு, சிறீலங்காவின் பலம்மிக்கவங்கி, மின்துறை, புகையிரதப்பகுதி, காப்புறுதி, இரும்பு - உருக்கு, தொலைத்தொடர்பு, எரிபொருள்துறை ஊழியர் முன்னணியொன்றைக் கட்டிவிட்டனர். இவர்கள் இப்போது, பாலாதம்புவின் துறைமுகத் தொழிலாளர் தொழிற்சங்கத்தோடு பேச்சுக்கள் நடத்திவருகின்றனர். இது சரிவருமிடத்து, ஏறத்தாழ 2 இலட்சம் வலிமை மிக்க தொழிலாளர் அணியின் எதிர்ப்பை, அம்மையார் சந்திக்க நேரிடும்.

இதற்கிடையில், பொதுசன ஐக்கிய முன்னணியில் கூட்டாளிக் கட்சியான ல.ச.ச. கட்சியின் தொழிற்சங்கத்தலைவர் பட்டிவீரக்கோன், சந்திரிகா அரசின் தனியார் மயமாக்கல் இரகசியங்களை வெளிப்படுத்தி, பரபரப்பை ஏற்படுத்திவருகின்றார். ஏற்கெனவே அவர், கடந்த மே மாதம் 29 ஆம் திகதி மின்னூழியர் வேலைநிறுத்தம் தொடங்கிய அன்றுதான், 'லீக்கோவை' (LECO) குறைந்தவிலையில் உடைமையாக்க முயன்ற நிறுவனம், உடன்பாட்டில் கைச்சாத்திட வர இருந்தது என்பதை அம்பலப்படுத்தி, சந்திரிகாவைப் பெருத்த, இக்கட்டில் சிக்கிவிடச் செய்தார். இப்போது - PERC எனப்படும் – தனியார் மயமாக்கலை ஒழுங்குபடுத்தும் நிறுவனத்தின் தலைவர் ராஜன் ஆசிர்வாதத்திற்கும், உலக வங்கியின் பிராந்திய நெறியாளருக்குமிடையே கைச்சாத்தான ஆவணமொன்றின் பிரதி தன்னிடமிருப்பதாகவும் – அதில் 72 துறைகளை தனியார் மயமாக்கச் சம்மதம் தெரிவிக்கபபட்டதாகவும், ஐ. தே. கட்சிக் காலத்தில் கூட, மொத்தம் 42 அரசு நிறுவனங்களே விற்கப்பட்டன என்றும் கூறி, மேலும் சிக்கலை உருவாக்கிவிட்டார். மிக விரைவில் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், தேசிய சேமிப்பு வங்கி, தொலைத்தொடர்பு நிறுவனம் (Telecom), புகையிரதத்துறை, சுகாதாரத் துறைகள் தனியார் மயமாகும் என அணுக்குண்டொன்றைப் போட்டு, அதிர்ச்சி அலைகளைப் பரவச் செய்திருக்கிறார். இதற்கிடையில் டி.யு. என். எஃவ். (DUNF) சிறிமானி அத்துலத்முதலியும் தன் பங்கிற்கு, தானும் சிங்களத் தலைவிதான் என்பதை உறுதிப்படுத்த முயல்வதால், அம்மையாருக்கு வேறு நெருக்கடி அதிகரித்தது. ''ஆளத் தெரியாத அம்மணி'' எனப் பட்டம் சூட்டப்படுகின்றது.

**சிங்களத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளுக்கும் தாய் முரண்பாடான இனச்சிக்கலுக்குத் தான் தீர்வாக வைத்திருக்கும் 'அமைதிப் பொதி'யின் சட்டவரைவினைத் தூக்கிக்காட்டி, உலகை ஏய்த்து உதவி பெறும் தந்திரம், எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே, இன்று அரசியல் உலகில் எழுப்பப்படும் கேள்வி.**

இத்தகைய நிலையிலே இன்று சந்திரிகா. யாரை எதனை நம்பி ஆட்சி செய்கின்றார்? அம்மையாரின் ஆட்சி நீடிக்க, இனச்சிக்கலுக்குத் தீர்வாகத்தான் வைத்திருக்கும் சட்டவரைவினை, ஈ.பி.டி.பி., புளொட் போன்ற தமிழ்க் குழுக்களை, எல்லாவற்றிற்கும் மேலாக யாழ்ப்பாண மக்களை நம்பியே, அவர் காலம் கழிக்க நேரிட்டு இருப்பது, வரலாற்றின் இன்னொரு நகை முரண். எனவே, சிங்களத்தில் நிலவும் எல்லா முரண்பாடுகளுக்கும் தாய் முரண்பாடான இனச்சிக்கலுக்குத் தான் தீர்வாக வைத்திருக்கும் 'அமைதிப் பொதி'யின் சட்டவரைவினைத் தூக்கிக்காட்டி, உலகை ஏய்த்து உதவி பெறும் தந்திரம், எவ்வளவு காலம் நீடிக்கும் என்பதே, இன்று அரசியல் உலகில் எழுப்பப்படும் கேள்வி. எல்லாம் சரி - இந்தியாவும் தமிழ்நாடும் புலிகள் விடயத்தில் அமைதி காத்தாலும், அரசு சார்பான தமிழ்க் குழுக்களைக் கூட அமைதிப்படுத்தக்கூடிய தீர்வுத்திட்டத்தை அம்மையாரால் வைக்க முடியாதே! ஏற்கெனவே வைக்கப்பட்ட திட்டத்தை மகாசங்கமே எதிர்க்கிறதே! 1996-1997 அம்மையாருக்குப் பெரும ஆபத்தான ஆண்டு என்கிறார், சிங்களத்தின் மூத்த ஆய்வாளர் ஒருவர். தமது பொருண்மிய நலன்களுக்காக மேற்குலகம் - எடுத்த எடுப்பிலே, தகவல்களைச் சரி பாராது - ஏதோ தீர்வுத்திட்டம் நடைமுறைக்கு வந்துவிட்டது போலவும், நடக்கும் போர் பற்றி - தமிழர் படும் அவலம் பற்றி -மௌனம் சாதிப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்பது விரைவில் விளங்கும் என்கின்றது, கொழும்புவாழ் தமிழர்களின் நடவடிக்கைக் குழு.

அம்மையாரின் ஏமாற்றும் படிமுறைமை எவ்வாறு அமைகின்றது? 1995 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 3 ஆம் திகதி, தீர்வுப் பொதியின் தகவல்கள் கசியவிடப்பட்டன; பின் சிங்களவரின் எதிர்ப்பைக் காட்டி அதிலிருந்து வழுவி நழுவி, அமைதிப் பொதியின் சட்ட வரைவு என ஒன்று, 1996 ஜனவரி 16 வெளியிடப்பட்டது. இன்னமும் பொதுசன ஐக்கிய முன்னணியின் உறுப்புக் கட்சிகளே, இவ் வரைவிற்கு அங்கீகாரம் அளிக்கவில்லை. டி.யு. என். எஃவ். மட்டுமல்ல, சி.ல.சு. கட்சியின் முக்கிய உறுப்பினர் பலரே இப்போது இதற்கு ஆதரவளிக்கவில்லையென்பதும் வெளிவரும் செய்தி. இதனாலே பொதுசன ஐக்கிய முன்னணிக்குள் இதுபற்றி ஒருமைப்பாடு காண, 1996 பெப்ரவரி 20ஆம் திகதிக் கூட்டத்திற்கான நாள் இன்றும் அம்மையாரின் நாட்காட்டியில் வரவேயில்லை. நாடாளுமன்றத் தெரிவுக்குழு நாடகம் எல்லார்க்கும் தெரிந்ததே. இதனாலேதான், தடம் புரண்டு - தறிகெட்டு தேசிய நீரோட்டத்தில் தலைகுப்புற வீழ்ந்து கிடக்கும் தமிழ்க் 'குழுக்கள்கூட சங்கடப்படுகின்றன. எனவே, ''அமைதிக்கான சட்டவரைவு என்பது அண்டப்புளுகு, ஆகாயத்தாமரை, கோயபெல்ஸ் பொய்'' எனக் காட்டமாகக் கண்டிக்கிறது. 'கொழும்பு தமிழர் நடவடிக்கைக் குழு'. கொதிப்புடன் இருக்கும் குமார் பொன்னம்பலமோ, ''கி. பி. 2050 ஆம் ஆண்டில்கூட, 'தெரிவுக் குழு' தெளிவான முடிவிற்கு வராது'' என்கின்றார்.

எனவே, மிக விரைவில் - புலிகள் கதையும் முடியவில்லை; போரும் ஓயவில்லை; தீர்வும் சரிவரவில்லை; போட்ட முதலும் திரும்பப்போவதில்லை என, முழு உலகமும் உணரும்.

அப்போது -

நிரந்தரமாகவே பகலும் சிறீலங்காவில் இரவாகிவிடும்! ○

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**